Regd. No. 2975

ஸ்ரீ:

ஸ்ரீ ராமாநுஜன் 325

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர்.

SRI RAMANUJAN

Editor:
Mahamahimopadhyaya
P. B. ANNANGARACHARYA, KANCHIPURAM-631503.

வருஷச் சந்தா ரூ. 10. ஜீவியச் சந்தா ரூ. 100

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாது மில்குரவர், தாம்வாழி—ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம்வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

1975ஸு ஆடிமீ

http://acharya.org

நன்கொடை வரவேற்பு

சென்னையில் விளங்கும் (ப்ரபல அட்வகேட்) ஸ்ரீமான் M. N. ரங்காசாரி அவர்கள் ஈட்டுப்பதிப்புக்காக ரூ. 250ம் ஸ்ரீ ராமாநுஜனுக்கு ஜீவியச் சந்தாவாக நூறு ரூபாயும் நன்கொடையளித்துள்ளார். நன்றியறிதலுடன் ஏற்றுக் கொண்டோம்.

தி. அ. அனந்தாழ்வான்

திருமண நிகழ்ச்சி

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சந பத்ராதிபரான ஸ்ரீமதுபயவே புத்தூர். S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமியுடைய திருக்குமார்த்தி ஸௌ. வைஜயந்திக்கும் திருச்சி தொட்டியத்திலிருக்கும் திருவெள்ளறை கீழத்திருமாளிகை ஸ்ரீ உ. வே. T. R. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியுடைய திருக்குமாரரான ஸ்ரீமான் கோவிந்தாசாரிக்கும் ஆனிமீ 5உ விவாஹம் ஸ்ரீரங்கத்தில் இனிது நடைபெற்றது ஸ்ரீவைஷ்ணவ சிகாமணிகள் இந்த வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அவர்களைத் தகுந்தவாறு ஸன்மானித்தார் புத்தூர் ஸ்வாமி. ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி ''ஸீதாகல்யாணம்'' என்பது பற்றியும் ஸ்ரீமான் உ. வே. கோயில் சதாபிஷேகம் தி. அ. கோவிந்த நரஸிம்ஹாசார்யஸ்வாமி ''லக்ஷ்மீ கல்யாணம்'' என்பது பற்றியும் உபந்யஸித்தனர். பண்டிதபாமரவாசியற அனைவரும் கேட்டு மகிழ்ந்தார்கள். திருவரங்கம் பெரியகோயிலிலிருந்தும், திருவெள்ளறை, ஸ்ரீவில்லிபுத்தூர், நாச்சியார் கோயில் முதலான பல திவ்யதேசங்களிலிருந்தும் பகவத் ப்ரஸாதங்கள் தம்பதிகட்குக் கிடைத்தன.

ஸ்ரீ மதுராப்ருந்தாவனத்தில் ஆஸ்தான வித்வானாக விளங்கும் ப்ரதிவாதிபயங்கரம் திருநாங்கூர் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. ப்ர. ப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருக்கோட்டியூர் ஸ்தானீகம். ஸ்ரீ உ. வே. வேங்கடாத்ரி அய்யங்கார் ஸ்வாமி, கோழியாலம் வித்வான் ஸ்ரீ உ.வே. ரங்கநாதாச்சார் ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர் அலங்காரம் ஸ்ரீ உ. வே. தேவராஜய்யங்கார் ஸ்வாமி முதலானோர்கள் எழுந்தருளியிருந்து நூதன தம்பதிகளுக்கு நல்லாசிகளையும், மங்கள வாழ்த்துப் பாக்களையும் உபயகலைகளிலுமெழுதி ஸபாமத்தியில் வாசித்து வழங்கினார்கள்.

ததீயாராதனமும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இங்ஙனம்,

ஸ்ரீமான் S. ராமஸ்வாமி ஐயங்கார்,

காஞ்சீ நகரத்திற்கு ஸௌபாக்யம்

ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி. அஹோபிலமடாதீச ஸ்ரீமத் அழகிய சிங்கர் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தையுத்தேசித்தும் சதாபிஷேக திருநக்ஷத்ரமஹோத்ஸவத்தை யுத்தேசித்தும் நாளது ஆடிமீ 5உ முதலாகப் பெருமாள்கோயில் மடத்தில் எழுந்தருளியிருந்து சிஷ்யவர்க்கங்களை யநுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றியிருக்கிறபடி. இது ஸ்ரீகாஞ்சீபுர வாஸிகளுக்குப் பரமஸௌபாக்யம்

(பத்ராதிபர்.)

http://acharya.org

ஸ்ரீ ராமாநுஜன்–325

ஆசிரியர்:
மஹாமஹிமோபாத்யாய ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 28 | ராக்ஷஸஸஹ ஆடி மீ 10—7—75 | ஸஞ்சிகை 1

இருபத்தெட்டாவது ஸம்புடத்தின் ஆரம்ப ஸஞ்சிகை.

அன்பார்ந்த ஆரியர்காள் !

சென்றமாதத்து ஸஞ்சிகையோடு ஸ்ரீ ராமாநுஜனுக்கு இருபத்தேழாவது பிராயம் பூர்த்தியடைந்து, இந்த ஸஞ்சிகையில் இருபத்தெட்டாவது பிராயம் தொடக்கமாகிறதென்பதை நினைவூட்டுகிறோம். ஒவ்வொருபிராயமும் நலமாகவே செல்லுவதுபோல இப்பிராயமும் நலம்மிகவே செல்லுமென்பதில் ஐயமில்லை. திவ்யப்ரபந்த மஹாநிதியென்று நாம் எழுதி வெளியிட்டு வந்த நிதியைத் தொடர்ந்து வெளியிட்டுவர வேணுமென்றே நமது குதூஹலம். ஆப்தர்கள் பலரும் அதைத் தொடர்ச்சியாக எதிர்பார்த்துமிருக்கிறார்கள். ஆனால் "அது ஒரு பெரிய டிக்ஷ்ணரிபோல விருத்தலால் மாதப் பத்திரிகையில் சிலசில பக்கங்களாக வெளியிட்டுவந்தால் இது எப்போது முடிவுபெறும்? உயிரெழுத்து முடிவதற்கே ஒன்றிரண்டு ஆண்டுகட்கு மேலாகும்போலிருக்கிறதே! மெய்யெழுத்தாதியான பதங்களிலுள்ள விசேஷங்களை நாங்கள் எப்போது காண்பது?" என்று கேட்பாரும் பலருளர். அன்னவர்களையும் திருப்தி செய்விக்க வேண்டியுள்ளது.

http://acharya.org

அதற்காகவே, வான்மீகி ராமாயணப்பகுதி, கம்பராமாயணப்பகுதி, அருளிச் செயல் விசேஷார்த்தப்பகுதி, பிள்ளைப்பெருமாளையங்கார் பிரபந்தப்பகுதி, ஸுபாஷித விவரணப்பகுதி, பெரியார்களின் பெருமைப்பகுதி, இதிஹாஸ புராண விசேஷப்பகுதி.........என்றிங்ஙனே சில பகுதிகளையிட்டு அபூர்வார்த்தங்களை விளக்கிவர உத்தேசிக்கிறோம். நேற்று ஜூன் மாதச் சஞ்சிகையிலேயே இந்த ப்ரக்ரியை தொடங்கப்பட்டுள்ளது. இப்படி உத்தேசிக்கப்பட்ட பகுதிகளுள், எந்தப் பகுதி முந்தியது? எந்தப்பகுதி பிந்தியது? என்கிற விசாரங்கொள்ளாமல் ரஸிகர்கள் அவ்வப்பகுதிகளை அநுபவித்துப் போகவேணும்.

நமக்கு எல்லாப் பகுதிகளிலும் துல்யமான அபிநிவேசமே யுள்ளது. ஆனாலும், பல பெரியார்களின் பெருமை விளக்கமென்னும் பகுதியில் அதிகமான அபிநிவேசமுண்டு. கீழ் நாலைந்து ஸஞ்சிகைகளிலிருந்தே பெரியார்களின் பெருமையைத் தொடர்ச்சியாக அநுபவித்து வருகிறேன், புகழுடம்பினால் ஜீவித்திருக்கும் [வைகுண்டவாஸிகளான] வித்வான்களான பெரியார்களைப்பற்றி நினைவுக்கு வந்தவரையில் எழுதி முடித்துவிட்டுப் பிறகு ஜீவித்திருக்கும் அறிஞர்களைப்பற்றி [கலாபேதத்தைக் கணிசியாமல்] எழுத விரும்பியுள்ளேன்.

வேதப்பகுதியென மகுடமிட்டு எழுதும் விஷயங்கள் ஸ்ரீ ராமாநுஜனை வாசிப்பவர்களில் பெரும்பாலர்க்கு வெறுப்பை விளைக்குமாயினும் வைதிகர்களாயுள்ளவர்களுக்கு மிகவும் பயன்படுமென்றெண்ணி அந்தப் பகுதியையும் சேர்த்துக்கொண்டேன். ... ... *

வேதப் பகுதி

நமது க்ருஷ்ணயஜுர் வேதத்தை ஸம்ஹிதைமட்டும் ஓதி நிறுத்திக் கொள்பவர்கள் பலருண்டு. அவர்களுக்குப் பதசரீரங்களில் ஸந்தேஹமுண்டாக ப்ரஸக்தியிராது. க்ரமாந்தமோ கனாந்தமோ ஓதினவர்களுக்கு ஸந்தேஹமுண்டாகலாம். ஸந்தேஹமுண்டாகாவிட்டாலும் "இங்கு ஏன் இப்படி? அங்கு ஏன் அப்படி?" என்கிற ஜிஜ்ஞாஸையாவது உண்டாகக்கூடும். அன்னவர்களுடைய மனத்தெளிவுக்கு எழுதுகிறேன். வேதத்தில் இடையிடையே சில கதைகளும் வருவதுண்டு; அவற்றையும் சில எழுதுவேன்.

'விததாத்யாயந் ப்ர சந்த்ரமா:"

அந்தணர்கள் பெரும்பாலுமறிந்த **"நவோநவோ பவதி ஜாயமாந:"** என்கிற பஞ்சாதி இரண்டாவது காண்டம் நாலாவது ப்ரச்நத்தில் முடிவில் உள்ளது இதில் [ஆயந்] என்கிற பதம் கவனிக்கத்தக்கது மேல் ஏழாவது காண்டம் முதல் ப்ரச்நத்தில் **"அங்கிரஸோ வை ஸத்ரமாஸத"** என்கிற நாலாவது அநுவாகத்தில் 'தே ஸுவர்கம் லோகமாயந்" என்றவிடத்திலும் [ஆயந்] என்கிற பதம் வருகிறது. இரண்டிடத்திலும் பதசரீரம் ஒன்றாயிருந்தாலும் ஸ்வரத்தில் பேதமுண்டு. "நவோ நவோ பவதி" யில் 'ஆயந்' என்பது ஆத்யநுதாத்தம், அந்தோதாத்தம். "ஆயந் இத்யா—யந்',

http://acharya.org

என்று வேஷ்டநமுமுண்டு. ஏழாவது காண்டத்திலிருந்து எடுத்துக்காட்டிய 'ஆயங்' பதம் ஸர்வாநுதாத்தமாயிருப்பதோடு அதற்கு வேஷ்டநமும் கிடையாது. என்ன காரணமென்னில் முந்தின ஆயங் பதம் ஸுபந்தம். பிந்தின 'ஆயங்' பதம் திங்ந்தம். [ஐத் ஐதாம் ஆயங்] என்று லங்ரூபம். முந்தினது [ஆயங் ஆயந்தௌ ஆயந்த:] என்று ப்ரதமாவிபக்தி சொல்லத்தக்க ஸுபந்தபதம். *பூமிர்பூம்நா என்கிற அநுவாகத்தில் ப்ரயங் என்கிற பதம் போலவும், *ஹிரண்யகர்ப்ப ஆபோஹ யத் ப்ரஜாபதே என்கிற பஞ்சாதியில் *த்யும்நேந ஸம்யத:* என்பதில் ஸம்யத்—பதம் போலவும் (ஆயத்—பதம்) என்று கொள்க. சத்ர்ப்ரத்யயாந்த பதமென்க. இதைப் பற்றி இப்போது இவ்வளவு போதும். ... ...

அருளிச்செயற் பகுதி

"அவரவர் தமதம தறிவறி வகைவகை
அவரவர் இறையவர் எனவடி யடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவில ரிறைபவர்
அவரவர் விதிவழியடைய நின்றனரே".

என்பது திருவாய்மொழி முதற்பத்தில் (1-5) உள்ள பாசுரம். இதில் ஈற்றடிக்கு உலகத்தார் உரைக்கும் பொருளாவது "அவரவர்கள் தங்கள் தங்கள் தலைவிதிப்படி யாவும் நிகழும் வண்ணம் நிற்கின்றார்கள்" என்பதாம். உலகில் யாருக்காவது ஏதாவது ஆபத்து ஸம்பவித்தால் அப்போது 'அவரவர் விதிவழியடைய நின்றனரே' என்று சிலர் சொல்லுவதைக் காண்கிறோமல்லவா? ஆயின் உண்மைப்பொருள் இஃதன்று. 'நின்றனர்' என்பது 'அவரவர்' என்னப்பட்ட சேதநரைக் குறித்ததன்று. [அவரவர் விதிவழியடைய இறையவர் நின்றனர்] என்று அந்வயித்துக் கொள்ள வேண்டும். இதனால் சொல்லப்பட்டதாவது ஸர்வஸ்வாமியான ஸ்ரீமந்நாராயணன் எல்லாத் தெய்வங்கட்கும் அந்தர்யாமியாக எழுந்தருளியிருப்பதால்தான் அவ்வோ தெய்வங்கள் தம்மைப் பற்றினார்க்கு அவரவர் விரும்பும் பலன்களைக் கொடுப்பதில் குறையற்றனவாகின்றன என்பதாம். எனவே நின்றனர் என்பது 'இறையவர்' என்ற ஸ்ரீமந்நாராயணனைப் பற்றியதென்பது உணர்த்தப்பட்டதாயிற்று. ஈடு முப்பத்தாறாயிரப்படியில் இங்கே "ஐயன் பாழியிலானைபோர்க்கு உரித்தாமன்றாயிற்று அவ்வோதேவதாமாத்ரங்களுக்கு பலப்ரதாந சக்தியுள்ளது" என்று ஸ்ரீஸூக்தியுள்ளது. இதன் கருத்தாவது. பிடாரி கோவில்களின் வாசலில் குயவன் செய்த பெரியபெரிய யானை குதிரைகள் நிறுத்தப்பட்டிருக்கும். ஆனால் அவை போர் செய்யமாட்டா, ஒழுங்காக அங்கு நிற்குமத்தனையேயன்றி ஒரு காரியமும் செய்யகில்லா. அதுபோலவே தேவதாந்தரங்களுமென்றபடி. [ஐயன் பாழி—சாஸ்தா என்கிற தெய்வத்தின் கோவில் என்க. ஆனை—யானை குதிரை முதலானவை போர்க்கு உரித்தாமன்று—யுத்தஞ்செய்ய உபயோகப்படுமேயானால் என்றவாறு.]

http://acharya.org

இந்தச் செய்யுள் கேட்டிருக்கிறீர்களா?

தண்டே னுகரா மண்டூகம் தண்டாமரையி னுடன்பிறந்தே
வண்டே கானத்திடைப் பிறந்தும்வந்தே கமலமதுவுண்ணும்
அண்டே பழகியிருந்தாலும் அறியார் பொல்லோர் நல்லோரைக்
கண்டே களிப்பருறவாடிக் கற்றோர் நல்லோர்பெற்றக்கால்.

(கருத்து) மண்டூகம்—தவளை. அது தாமரையோடு கூடவேதான் பிறந்திருக்கின்றது; ஆயினும், தாமரை மலரிற் பெருகும் மதுவைப்பானம் செய்ய பாக்கியமற்றுச் சேற்றுநீரைக் குடித்துக் கத்துகின்றது. மண்டுகத்தின் நிலை இதுவாயிருக்க, வண்டின் செய்தியைக் கேண்மின். அது தாமரையோடு கூடப் பிறந்ததன்று; எங்கேயோ காட்டிற் பிறக்குமது. வடமொழியில் அதற்குச் **சஞ்சரீக**மென்றும் **ப்ரமர**மென்றும் பெயர். எங்கும திரிந்து சுழன்று கொண்டிருக்கும். தாமரைப் பொய்கையின் வாசனைவீச, அதுவழிகாட்டத் தடாகந்தோறும் வந்து சேர்ந்து மலரில்படிந்து மகரந்தத்தைப் பருகிச் செவிக்கினிதாக ரீங்காரம் செய்து கொண்டு திரியும். ஆழ்வாரருளிச் செயல்களில் *வரிவண்டிசைபாட* என்றும், *தென்னுதெனுவென்று வண்டுமுரல்* என்றும், வருமிடங்கள் பல்லாயிரம். இதனுல் என்ன தெரிந்து கொள்ளுகிறோம்? மேலே குறித்த செய்யுளின் பின்னடிகளுக்குப் பொருள் விவரிக்கவேணுமோ?

வேங்கடாத்வரியின் ஸுபாஷிதமொன்று கேண்மின்

முந்நூறு நானூறு வருடங்களுக்கு முன்பிருந்த அரசாணிபாலை வேங்கடாத்வரியென்பவர் **ச்லேஷயமக சக்ரவர்த்தி** யென்று விருதுபெற்றவர். அவருடைய நூல்களைப் படித்தால் நல்ல விற்பத்தியுண்டாகும். விச்வகுணாதர்சம், வரதாப்யுதயமென்கிற ஹஸ்திகிரிசம்பூ, உத்தரசம்பூ என்னுமிந்நூல்கள் விசேஷித்து விற்பத்தி வளர்ச்சிக்கு ஹேதுவாம். அவர்தாமே ஸுபாஷித கௌஸ்துபமொன்று ஒரு நூல் இயற்றியுள்ளார். ஸுபாஷிதமென்றால சாடுச்லோகமென்றபடி. அதில் ஒரு சுலோகம் கேளீர்;

"வாசாடோக்தெள வாகம்ருதே வா ஸுகவீநாம்
ஸ்தோகப்ரஜ்ஞாஸ் துல்யத்ருசோ ஹந்த பவந்தி
கோமாயூநாம் கோகிலயூநாமபி சப்தேஷு
ஏகாகார மாநஸவ்ருத்திர் மஹிஷாணும்,'.

(கருத்து) உலகத்தில், வீண்வம்பு பேசுகிற வாயாடிகளுமுண்டு. அமுதொழுகுகின்ற இன்சொற்களைப் பொழிகின்ற உண்மைப் பண்டிதர்களுமுண்டு. வாயாடிகளென்பவர்கள் சிறிதும் படிப்பில்லாமல் எதையாவது வாய்வந்தபடி பேசிக் கொண்டிருப்பதையே தொழிலாக வுடையவர்கள். ரஸிகர்கள் காது கொடுத்துக் கேட்கும்படியானபேச்சு அவர்களிடத்தில் ஒன்றுமிராது. கசடறக் கற்றுணர்ந்தவர்களோ வென்னில், அமுதமயமாகப் பேசி "கலையிலங்கு மொழியாளர்" என்னும்படி ஸகல சாஸ்த்ரார்த்தங்களும் ரமணீயமாகத் தொனிக்கும்படி

http://acharya.org

யான வாய்வீறு உடையவர்களாயிருப்பர்கள். இவ்விருவகைப் பட்டவர்களுடைய வும் பேச்சுக்களை விவேகிகளான ரஸிகர்கள் கேட்டால், வாயாடிகளின் பேச்சை வெறுத்து உண்மைப் பண்டிதர்களின் பேச்சை உவப்பர்கள். அறிவிலிகளான அற்ப ஜனங்களோ வென்னில், பேச்சில் வாசி அறிய மாட்டாமல் இரண்டிலும் ஒரு நிகராயிருப்பர்கள். இது என்போல வென்னில்; காட்டில் ஒரு புறத்தில் நரிகள் ஊளையிடுகின்றன; மற்றொருபுறத்தில் குயில்கள் பஞ்சமராகம் பாடுகின்றன; இவ்விரண்டு த்வனிகளும் எருமைக் கடாக்களின் காதிலேவிழும்; விழுந்ததனல் என்னுகும்? ஏதேனும் வாசி தெரியுமோ? அதுபோல வென்க: சொற்களில் ரஸ மறிந்து உகப்பார் சிலரேயாவர். வம்புப் பேச்சுக்களையுகப்பவர்களே உலகில் மலிந்துள்ளார்கள். (வம்புப் பேச்சுக் காரர்கள் பேசும் வகை யாதெனில்; கப்பல்கள் கடலில்தான் போகும்; மோட்டார் வண்டிகளும், சாதாரண வண்டிகளும் தரையில் தான் செல்லும்; ரயில் வண்டிகள் தண்டவாளத்தின் மீதுதான் செல்லும். ஆகாய விமானங்கள் வானத்தில்தான் ஓடும். ஒருவன் மூன்றும் வகுப்பு டிக்கெட்டு வாங்கினுல் அவன் இரண்டாம் வகுப்பில் ஏறமுடியாது. இரண்டாம் வகுப்பு டிக்கெட்டு வாங்கினுல் இரண்டாம் வகுப்பிலும் ஏறலாம்; மூன்றும் வகுப்பிலும் ஏறலாம். ஆனுல் முதல் வகுப்பில் ஏறமுடியாது. இரயில் வண்டியின் டிக்கெட்டு மோட்டார் வண்டிகள், பேருந்து வண்டிகளுக்குச் செல்லாது............இப்படியாக அரட்டை பேசுவதாம். ஸ்ரீவசனபூஷணம், ஆசார்யஹ்ருதயம் போன்ற சிறந்த நூல்களி லிருந்து உயர்ந்த விஷயங்களை எடுத்துக்கூற ஆற்றலற்றவர்கள் இப்படித்தானே பேசிக்கொண்டு போதைப்போக்கவேண்டும். எது பேசினுலும் சிரித்துக்கொண்டே கேட்க சிலர் இருக்கின்றுர்கள்.) ... ... *

எமது சுலோகமும் கேளீர்

மேலே குறித்த ஸுபாஷித கௌஸ்துபத்தை அஸ்மதாசார்யரான ஸ்ரீமத் ஜகத்குரு காதிஸ்வாமி தாம் தேவநாகரலிபியில் தமது ஸுதர்சன அச்சுக்கூடத்தில் அச்சிடுவித்தார். அப்போது வித்யார்த்தியாயிருந்த அடியேனுக்கு, மேலேவிவரித்த *வாசாடோக்தௌ* என்கிற சுலோகத்தை யெடுத்துரைத்தருளி ரஸித்து, "இதே போல் நீ ஒருசுலோகம் இயற்று, பார்ப்போம்" என்று புன்முறுவலோடுநியமித்தருள, அப்போது விஜ்ஞாபித்த சுலோகமிது; (எனது நூல்களொன்றில் அச்சிட்டு மிருக் கிறேன்.)

அல்பிஷ்டோக்தௌ அத்புதஸூக்தாவபி ந்ருணும்
அல்பஜ்ஞாநா ஹந்த! பவந்தி ஹ்யவிசேஷா:
பேகாராவே பேர்யபிகாதே பிகநாதேபி
ஏகா வ்ருத்தி: சேதஸி ஹம்ஹோ! மஹிஷாணும்.

(கருத்து) மனிசருடைய மிக அற்பமானவார்த்தைகளிலும் அற்புதமான சொற்பொழிவுகளிலும் அறிவிலிகள் ஒரேவிதமாகத்தானிருப்பர்கள். (அதாவது) 'இதுவம்புப்பேச்சு, இது ஸாரமான வார்த்தை' என்று வாசிகாணமாட்டாதேயிருப் பர்களென்றபடி. (எதுபோலவென்னில்;) தவளைகளின் கத்துதலிலும் பறையடித்த லிலும் குயில் கூவுதலிலும் எருமைக்கடாக்கள் எவ்விதமான வாசியும் அறியமாட்டா தவாறு போல.

http://acharya.org

வால்மீகி ராமாயண விசேஷார்த்தப் பகுதி

ஸ்ரீராமாயணத்தில் அயோத்யாகாண்ட உபக்ரமத்தில் (1-7.)* ஸ ஹி தேவை ருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி:, அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந:.* என்கிற சுலோகம்-ஸ்ரீமஹாவிஷ்ணுவே ஸாக்ஷாத் இராமபிரானாகத் திருவவதரித்தருளினானென்கிறது. இங்கு *[உதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி: தேவை: அர்த்தித:]* என்றுள்ளது. மிகக் கொடியவனான இராவணனை வதஞ்செய்ய வேண்டின தேவர்களாலே பிரார்த்திக்கப்பட்டு—என்றிருப்பது ஆராயத்தக்கது. பிரார்த்திப்பவர்கள் 'எங்களுடைய கஷ்டங்களைப் போக்கவேணும்' என்று பிரார்த்திப்பது தகுதியேயொழிய, எதிரியைக் கொலைசெய்ய வேணுமென்று பிரார்த்திப்பது தகுதியன்றே. இராவணன் சரணாகதி செய்துவிட்டானாகில் அவனைக் கொலை செய்ய வேண்டிய அவசியமில்லையே. விபீஷண சரணாகதிப்ரகரணத்தில் *விபீஷணோ வா ஸுக்ரீவ! யதி வா ராவணஸ் ஸ்வயம்* என்கிற சக்ரவர்த்திதிருமகனார்க்கு இராவணனை வதம் செய்தேயாகவேணுமென்கிற கருத்துமில்லையே. ஆக, "இராவணனால் உபத்ரவிக்கப்படுகின்ற எங்களைக் காத்தருள வேணும்" என்று தேவர்கள் பிரார்த்திக்கவேணுமேயல்லது, அவனை வதஞ்செய்யவேணுமென்று பிரார்த்திக்க வேண்டியதில்லையே என்று சங்கிக்க நேரும். (இதற்கு ஸமாதானம்) *த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித்* [இருபிளவாகப் பிளந்து குறுக்கே விழுந்தால் விழுவனேயல்லது ஒருவனையும் வணங்கமாட்டேனென்கிற இராவணனுடைய இயல்பை அறிந்தவர்கள் தேவர்கள். தேள் பாம்பு புலி சிங்கம் முதலிய கொடிய ஜந்துக்களைக் கொலை செய்தாலல்லது உய்ய விரகில்லாதாப்போலே இராவணனை வதஞ்செய்தாலல்லது பிழைக்க விரகில்லையென்றறிந்த தேவர்கள் இங்ஙனேயல்லது வேறு விதமாகப் பிரார்த்திக்க ப்ராப்தியில்லை யென்றுணர்க.

ஒரு வித்வானின் சமத்கார வார்த்தை

ஒரு வித்வான் திருவேங்கடமுடையானை ஸேவிக்கத் திருமலைக்குச் சென்றிருந்தார். இரண்டு மூன்றுநாள் காத்திருந்தும் திருமலையப்பனுடைய ஸேவை கிடைக்கப்பெறாத வருத்தத்தினால் திருமுன்பே தெண்டனிட்டு ஒரு சுலோகம் விண்ணப்பம் செய்தார்; (அதாவது)—

ஐச்வர்யமதமத்தோஸி மாம் ந ஜாநாஸி மாதவ!
பரை: பரிபவே ப்ராப்தே மத்தீநா தவ ஸ்திதி:"

எம்பெருமானே! நீ லக்ஷ்மீபதியாகையாலே செல்வச் செருக்கினால் என்னை இன்னானென்று அறியமாட்டாது ஸேவை தந்திலை. புறமதத்தவர்கள் உன்னுடைய பரத்துவத்தை க்ஷேபித்து தேவதாந்தரங்களுக்குப் பாரம்யத்தைப் பேசும்போது அவர்களை நிரஸிக்க என்னைத்தானே அழைக்கப்போகிறாய். நான்வந்துதானே உன்னை நிலை நிறுத்தவேணும், அப்போது ஸேவித்துக்கொள்ளுகிறேன்-என்றவாறு. எம்பெருமான் *உள்ளுவாருள்ளிற்றெல்லா முடனிருந்தறியுமவனாகையாலே இந்த வித்வானுடைய மனவருத்தத்தை யறிந்து உடனே அருளிப்பாடிட்டு உள்ளே வரவழைத்துச் சிறப்புகளும் தந்தருளினன் என்பது ப்ரஸித்தமான இதிஹாஸம்.

http://acharya.org

பல பெரியார்களின் பெருமை (முன்னிதழின் தொடர்ச்சி)

ஸ்ரீமத் உத்தரமேரூர் கனபாடி ராகவாசாரியர் ஸ்வாமி

காவ்யநாடகாலங்காரங்களில் ஆழ்ந்த வ்யுத்பத்தி பெற்று வேதலக்ஷணங்களையெல்லாம் முகஸ்தமாகக்கொண்டு பதக்ரம ஜடாகநங்களோடு நில்லாமல் வர்ணக்ரமாந்தமாகவும் பரிச்ரமப்பட்டு 'ஸாங்கவேதாத்யாயி' என்று புகழ் பெற்றவர் இந்தஸ்வாமி. காஞ்சீப்ராந்தத்தில் கநபாடிகளில்லையென்கிற அபப்ரதைஇந்த ஸ்வாமியொருவரால தான் நீங்கிற்று. இந்த ஸ்வாமி இன்னமும் ஜீவித்திருக்கத் தக்கவராயிருந்தும் 35 வருஷங்களுக்கு முன்னமே பரமபதித்து விட்டார். இவர் அடிக்கடி காஞ்சிக்கு எழுந்தருள்வர். அடியேனோடு ஸம்பாஷிக்கவேணுமென்றே பலகால் எழுந்தருளி நாலு நாள், எட்டு நாள், பத்து நாள்கூட அடியேனுடைய க்ருஹத்திலேயே யெழுந்தருளியிருந்ததுண்டு. அக்காலத்தில் வேதலக்ஷண விஷயமாக அடியேனெழுதி வெளியிட்ட வேதாத்யயந ஸர்வஸ்வாதி க்ரந்தங்களை ஒரக்ஷரம் விடாமல் ஆழ்ந்து ஆராய்ந்து அபிநந்தித்த இந்த ஸ்வாமியின் அபிநந்தந பத்ரிகைகள் பல வெளிவந்திருக்கின்றன. வேதமோதினவர்களில் ஸம்ஸ்க்ருத வைதுஷ்யம் பெற்றவர்களில் இந்த ஸ்வாமி போன்றவர்கள் மிகச்சிலரேயாவர்.

ஸ்ரீமத் நல்லார் கிருஷ்ணமாசாரியர்

இந்த ஸ்வாமி ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்து ஸ்ரீபெரும்பூதூர் கலாசாலையில் வ்யாகரண வேதாந்தங்களை யதிகரித்து ஸ்ரீவில்லிபுத்தூரில் பலர்க்கு உபய வேதாந்தங்களையும் இதிஹாஸ புராணங்களையும் ப்ரவசநம் செய்து வந்தார். மேன்மேலும் மிக அபிவிருத்திக்கு வரவேண்டியவர் திடீரென்று திருநாடலங்கரித்து விட்டார்.

ஸ்ரீமத் தெய்வசிகாமணி ஸ்வாமி

இந்த ஸ்வாமியும் ஸ்ரீவில்லிபுத்தூரிலேயே வாழ்ந்து ப்ரவசநங்கள் செய்து கொண்டிருந்த பரமஸாத்விகர். ஸ்ரீ. திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமி ஸன்னிதியில் பகவத்விஷய ரஹஸ்யாதிகளை நன்கதிகரித்து மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

ஸ்ரீமத் அழகப்பய்யங்கார் ஸ்வாமியும் அழகராசார்ய ஸ்வாமியும்

இவ்விரண்டு ஸ்வாமிகளும் வானமாமலையில் மடத்தில் ஆஸ்தான வித்வான்களாக விளங்கினவர்கள். அழகப்பங்கார் ஸ்வாமி மிக ப்ரசண்ட பண்டிதர். ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி சின்ன கலியன் ஸ்வாமிக்கு நெருங்கின தேஹாநுபந்தியென்றும், ஸ்வாமி ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளினபின்பு இவரிடத்தில் சாஸ்த்ரங்கள் பயின்று தேர்ச்சி பெற்றாரென்றும் கேள்வி.

ஸ்ரீமத் புத்தூர் ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி

ஸ்ரீரங்கத்திற்கருகிலிருக்கும் புத்தூர் அக்ரஹாரத்தில் வாழ்ந்த இந்த மஹான் ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சன பத்ரிகையைத் தொடங்கியதுமல்லாமல், நமது

http://acharya.org

பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளையெல்லாம் அச்சிட்டு வெளியிடவேணுமென்றும் ஸங்கல்பித்து அதற்கு வேண்டிய சாச்வத மூலதன நிதியை ஸ்தாபித்து வைத்தார். பல க்ரந்தங்களை வெளியிடவும் செய்தார். இவர் திருக்குமாரரான ஸ்ரீமத் S. க்ருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் அட்வகேட் ஸ்வாமி தமது திருத்தகப்பனாரின் கைங்கர்யங்களையெல்லாம் மிகவிஸ்தாரமாகச் செய்துகொண்டு ஜகத்ப்ரஸித்தராய் விளங்கி வருகிறார்.

ஸ்ரீமதுபயவே. மஹர்ஷி வாஸுதேவாசார்ய ஸ்வாமி

சென்னை மாம்பலத்தில் இருபது ஸம்வத்ஸரங்களுக்குமுன் ஜ்ஞாநாநுஷ்டான நிதியாக வாழ்ந்த ஸ்ரீ உ, வே. S. வாஸுதேவாசார்ய ஸ்வாமியை இன்றைக்கும் நினையாதாரில்லை. இவர் மஹர்ஷியென்று வழங்கப்பட்டுவந்தார். லௌகிக வ்ருத்தியிலிருந்துகொண்டு வைதிக மார்கத்தில் ச்ரத்தை கொண்டவர்கள் இந்த ஸ்வாமி அக்ரகண்யராக விளங்கினர். இவரிடத்தில், லௌகிகவித்யைகளைப் போலவே வைதிகக் கல்விகளைப் பயின்றவர்களும் பலர். ஸ்ரீபாஷ்யபகவத்விஷய ரஹஸ்ய க்ரந்த காலக்ஷேபங்களை நாள் தவறாமல் ஸாதித்துக் கொண்டிருந்தவர். "நாட்காலே நீராடி" என்று ஆண்டாள் ஸாதித்தது மார்கழி முப்பது நாளைக்கு. இந்த ஸ்வாமியின் அனுஷ்டானம் யாவதாயுஷம். வேதாந்த தீபிகை யென்னும் பெயரால் நடந்துகொண்டிருந்த அஹோபில மடத்துப் பத்திரிகைக்கு இவர் பல வாண்டுகள் ஸம்பாதகராகவிருந்து அரிய பெரிய விஷயங்களை யுதவியுள்ளார். இவருடைய ஸர்வபூத ஸௌஹார்த்த ஸௌஜந்யங்களைப்பற்றி எத்தனைபக்கமெழுதினாலும் மிகையாகாது. ஸகல பூர்வாசாரியர்களிடத்திலும் ஸமமான ப்ரதிபத்தி கொண்டிருந்தவர் இந்த ஸ்வாமி. தம்முடைய திருவுள்ளத்திற்கு ஏலாத அர்த்தம் எந்த மஹான் ஸாதித்ததாயிருந்தாலும் அதை ஆதரிக்கமாட்டார். இவர் மடத்து ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவராதலால் நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திகளை வேதத்திலும் மேம்பட்டதாகக் கொண்டிருந்தார். சென்னையில் நடைபெறும் அடியேனுடைய உபந்யாஸங்களுக்குப் பெரும்பாலும் ஸேவைஸாதித்துக்கொண்டிருந்ததனால் இவருடைய பரிசயம் அடியேனுக்கு அபரிமிதமாக வாய்த்தது. மனோவாக்காயங்களில் ஐக்ருப்யம் என்கிற ஆர்ஜவகுணத்தை இந்த ஸ்வாமியிடத்தில்தான் அடியேன் அதிகமாக அனுபவித்தவன். ... ...

ஸ்ரீமதுபயவே. வை. மு. சடகோபராமாநுஜாசாரிய ஸ்வாமி

திருவல்லிக்கேணியில் ஸ்ரீமதுபயவே வைத்தமாநிதி முடும்பை அப்பங்கார் ஸ்வாமியென்று ஸுப்ரஸித்தரான ஸம்ப்ரதாயப்ரவசன நிரதர் எழுபது வருஷங்களுக்கு முன்பு எழுந்தருளியிருந்தார். அவருடைய மூத்த திருக்குமாரர் சடகோபராமாநுஜாசார்யஸ்வாமி. இளைய திருக்குமாரர் வை. மு. பார்த்தஸாரதி ஐயங்காரென்பவர் இற்றைக்கும் திருவல்லிக்கேணியில் வாழ்ந்து வருகிறார். இவருடைய திருத்தமையனாரான சடகோபராமாநுஜாசாரியர்ஸ்வாமி பரமபதித்து இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு மேலாகிறது. இவர் தமிழ்க்கடலில் பாரங்கதராயிருந்ததோடு வடமொழியிலும் ஆழ்ந்த ஞானம்பெற்றிருந்தார். கும்பகோணம் காலேஜில் பலவாண்டுகள் தமிழ்த் தலைமையாசிரியர் பதவியையலங்கரித்திருந்தார்.

ஜகத்ப்ரஸித்தகாலக்ஷேபபரரான திருத்தகப்பனாரிடத்தில் ஸம்ப்ரதாய க்ரந்தங்களை வரியடைவே கற்றவராதலால் பூர்வாசார்ய திவ்யஸூக்திகளில் ஒப்புயர்வற்ற ப்ரதிபத்தி கொண்டவர் என்பது இவர்க்குத் தனிச்சிறப்பு. கம்பராமாயணம், பிள்ளைப்பெருமாளையங்கார் அஷ்டப்பிரபந்தம் முதலிய பல தமிழ் நூல்களுக்கு இந்த ஸ்வாமியெழுதிவெளியிட்டிருக்கும் உரைகள் உலகம் போற்ற விளங்குகின்றன. அக்காலத்தில் பள்ளிக்கூட மாணாக்கர்களுக்குப் பேருதவியாக இவர் எழுதி வெளியிட்ட உரைகள் (Text Notes) அபரிமிதம். மஹாமஹோபாத்யாய. சாமிநாதையரவர்களுக்கு இவரிடத்தில் மஹத்தான ப்ரதிபத்தி.

இந்த ஸ்வாமிக்குக் காஞ்சீபுரத்தில் நெருங்கின தேஹஸம்பந்திகள் இருந்தபடியால் இவர் அடிக்கடி காஞ்சீபுரத்திற்கு எழுந்தருள்வர். ஒருஸமயம் எழுந்தருளினபோது இரண்டு மாதங்கள் தங்கியிருந்தார். அப்போது இவரிடத்தில் அடியேன் யாப்பிலக்கண நூல்கள் சில வாசிக்க ப்ராப்தமாயிற்று. இரண்டு வருடங்கள் வாசித்துணர வேண்டிய விஷயங்களை இரண்டு மாதங்களில் கற்பித்தார். அப்போது இவருடைய போதனாசக்தியை அற்புதமாகக் கண்டு வியந்தேன். அடியேனுடைய மாதாமஹரான ஸ்ரீமத். பரமஹம்ஸ. (ஷஷ்டி) ஜீயர்ஸ்வாமியிடம் [தேவப்பெருமாள் ஸந்நிதிக்குள்ளிருந்த] சடகோபநிலைபாடசாலையில் தமிழ் வாசித்தவர்கள் பலர். அவர்களில் ஒருவரான புன்னை சிம்மச்சார் என்பவரிடத்தில் தமிழ்க் கலைகள் பயின்றவர் இந்த வைத்தமாநிதி ஸ்வாமி. இவர் மிக்க இளமையிலேயே பரமபதித்தனர்.

ஸ்ரீமதுபயவே. வை. மு. கோபாலக்ருஷ்ணமாசாரிய ஸ்வாமி

மேலே ப்ரஸ்தாவித்த சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமிக்குத் தம்பிமுறையில் சேர்ந்த இவரும் சிறந்த தமிழ் வித்வானாக விளங்கினவர். தமிழுலகுக்குப் பேருதவிகள் புரிந்தவர். ஸம்ஸ்க்ருதஜ்ஞானமும் நன்குடையவர். திருவல்லிக்கேணியிலேயே வாழ்ந்தார். சடகோபராமாநுஜாசாரியர்ஸ்வாமி உரைநூல்களெழுதிய போது இந்த கோபாலக்ருஷ்ணமாசாரியரும் சே. கிருஷ்ணமாசாரியர் என்று ப்ரஸித்தரான தமிழ்ப் பண்டிதரும் உடனிருந்து துணைபுரிந்தவர்கள். இவ்விருவரும் சடகோபராமாநுஜாசார்யஸ்வாமியினால் முன்னேற்றமடைந்து சில பல தமிழ்நூல்களை வெளியிட்டு ப்ரஸித்திபெற்றவர்கள். சே. கிருஷ்ணமாசாரியர் பதிப்பு நூல்களில் பகவத்விஷயப்பதிப்பு மஹோபகாரகமாய் விளங்குகின்றது.

(ஸ்ரீரங்கம்) பெரிய கோயில் வித்வான்கள்

ஸ்ரீமதுபயவே. கோயில் பத்தராவிஸ்வாமி

இவர் திருவரங்கம் பெரிய கோயிலில் அறுபது ஆண்டுகட்குமுன்பு எழுந்தருளியிருந்த மஹாஸ்வாமி. நெருப்பையலம்புகிறவர்' என்னும் படியான சிஷ்டாக்ரேஸரர். உபயவேதங்களை அதிகரித்து நம்பெருமாள் ஸன்னிதியில் வேதபாராயணகைங்கரியத்தில் அக்ரேஸரராயிருந்து அசீதி ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்தவர். நம்முடைய ஸம்ப்ரதாயக்ரந்தங்களில் பரிநிஷ்பந்நமான ஞானமுடையவர். அடியேனுடைய வியாக்கியானங்களில் 'கோயில் பத்தராவிஸ்வாமி

http://acharya.org

இங்ஙனே திருத்துவர்'' என்று ஆங்காங்கு எழுதியிருக்கின்றேன். இந்தஸ்வாமி இளமை தொடங்கியே தூமசகடமேறியறியாதவர். அடியேனுடைய திருத்தகப்பனார்க்கு இவர் பரமஸ்நிக்தர். அதனால் திருத்தகப்பனார் திருமேனி பாங்கில்லாமலிருந்த ஸமயத்தில் அவரைக் காண்பதற் கென்றே கோயிலிலிருந்து நடைவழியாகவே காஞ்சிக்குவந்து சேர்ந்து சில நாட்கள் எழுந்தருளியிருந்தார். அப்போது தகப்பனாருடைய நியமனங்கொண்டு இந்த ஸ்வாமிபக்கலில் கத்யத்ரயம் மூலம் அதிகரித்தேன். அது பதினான்காவதுவயதில், பிறகு இரண்டு மூன்று பர்யாயம் அடியேன் கோயிலுக்கு விடை கொண்டிருந்தபோது இந்த ஸ்வாமியோடு மிக நெருங்கிப் பழகியிருக்கிறேன். இவரைப் போன்ற ஜ்ஞாநாநுஷ்டான ஸம்பந்நர் இக்காலத்தில் ம்ருக்யரென்றே சொல்லவேணும். ... ... *

ஸ்ரீமதுபயவே. ஸ்ரீவில்லிபுத்தூர் மேலைவாத்யார் திருமலை ஐயங்கார் ஸ்வாமி

திருமலை திருப்பதியில் ஸ்ரீமத்பரமஹம்ஸ. பெரிய ஜீயர் ஸ்வாமியாஸ்தானத்தை அலங்கரித்து ஸமீபத்தில் திருநாடலங்கரித்த ஸ்ரீமஹாஸ்வாமிக்கு பூர்வாச்ரமத்தில் மாதுலரான இந்த ஸ்வாமி ஸ்ரீவில்லிபுத்தூரில் மேலைவாத்யாரென்றே வ்யபதிஷ்டரா யெழுந்தருளியிருந்த சிஷ்டாக்ரேஸரர். இந்த ஸ்வாமியினுடைய பரிசயம் அடியேனுக்கு இளமையிலேயே கிடைத்தது. இருவோமுக்கும் தேச வ்யவதானம் மிகவுமிருந்தாலும் மதுரை கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலானவிடங்களில் பலகால் ஸந்திக்க நேர்ந்ததுண்டு. ஸ்ரீவில்லிபுத்தூரிலும் பலமுறை ஸேவித்தேன் இவர் சிறந்த வித்வானாயிருந்ததோடு ஆசுகவி, சித்ரகவி இத்யாதி பிருதாவளிகளையும் பெற்றிருந்தார். இவரிடத்தில் அடியேன் அதிகமாகக் கண்ட குணம் ராஸிக்யம், அது ஸாமான்யமன்று. பரமரஸிகர், மஹாரஸிகர் என்று எவ்வளவெழுதினாலும் போதாது. இவரிடத்தில் ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் அதிகரித்தவர்கள் பலருளர். இவருடைய ஸ்வீக்ருத குமாரரான ராமாநுஜ ஐயங்கார் வாக்மியாக விளங்கி வருகிறார். ... ... *

ஸ்ரீமதுபயவே. ஸ்ரீவர்ணம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி

ஸ்ரீ முஷ்ணம் ஸ்வாமி யென்றும் ஸ்வர்ணம் ஸ்வாமி யென்றும் விக்யாதராயிருந்த இந்த ஸ்வாமி ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. இஞ்சிமேட்டழகிய சிங்கர்க்கு பூர்வாச்ரமத்தில் ஆசார்யராக விளங்கினவர்; மஹா சிஷ்டாக்ரேஸரர். நெருப்பையும் அலைப்புகிறவர் என்றால் அதிசயோக்தியாகாது. தையமாவாஸ்யை மஹோத்ஸவம் ஸேவிக்கத் திருநாங்கூரெழுந்தருளியிருந்த ஸ்ரீமத் ஜகத்குரு சாதி ஸ்வாமியோடுகூட அடியேன் விடை கொண்டிருக்கையில் இந்த ஸ்வர்ணம் ஸ்வாமியும இஞ்சிமேடு (பூர்வாச்ரம) ஸ்வாமியும் அங்கே யெழுந்தருளி யிருந்தார்கள். சிஷ்யாசார்ய க்ரமத்தின் அழகை அங்கே அநுபவிக்க நேர்ந்து அகங்குழைந்தது. இரு ஸ்வாமிகளும்அப்போதே [குறட்பிரமசாரியான] அடியேன்பால் விசேஷ கடாக்ஷஞ் செய்தருளினபடியை நினைக்குங்கால் நெஞ்சமுருகு கின்றது. அப்போது ஸ்வாமிகள் பாதசாரமாகவே யெழுந்தருளுகிறபடியாதலால் சில நாட்களில் ஸ்ரீ காஞ்சிக் கெழுந்தருளி ஸன்னிதி வீதியில் பருத்திப்பட்டு திருவேங்கடாசார்ய

ஸ்வாமி திருமாளிகையில் எழுந்தருளியிருந்து கொண்டு ஈட்டு ப்ரவசனம் தொடங்கினார் ஸ்வர்ணம் ஸ்வாமி. சில நாட்களில் அடியேனும் விடைகொண்டு ச்ரவணம் செய்ததுண்டு. அநுகரிக்கத்தக்கபத்ததியாயிருந்தது.

ஸ்ரீமதுபயவே காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி

ஸ்ரீவைஷ்ணவ வுலகில் ஸ்வாமியின் புகழ் அத்விதீயம். அடியேனுக்கு இருபத்தைந்து வயது வரையில் இந்த ஸ்வாமியின பரிசயம் ஏற்படவில்லை. ஸ்ரீஉவே. திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமியோடு மிக நெருங்கின பழக்கமிருந்த காலத்தில் அவர் இந்தஸ்வாமியின் ப்ரபாவாதிசயங்களைப் பலகால் பன்னியுரைக்கக் கேட்டிருந்தேன். ஸ்வாமியை ஸேவிக்க வேணுமென்றே ஒருஸமயம் காரப்பங் காட்டுக்கு விடைகொண்டிருந்து ஸேவித்து வந்தேன். பிறகு பல பர்யாயங்கள் நெருங்கி ஸேவிக்கப்ராப்தமாயிற்று. ஸ்வாமி சிலவாண்டுகள் நம்பெருமாள் ஸன்னிதியிலெழுந்தருளியிருந்து ஸ்ரீரங்கநாராயண ஜீயர் மடத்தில் ஸ்ரீபாஷ்ய பகவத் விஷயப்ரவசனம் செய்து கொண்டிருந்த காலத்தில் சில நாட்கள் அணுகி வர்த்திக்கும் பாக்கியம் நேர்ந்தது ராஜமன்னார் ஸன்னிதி, மதுரை, திருவல்லிக்கேணி, ஸ்ரீபெரும்பூதூர் முதலானவிடங்களில் ஸ்வாமியின் உபந்யாஸாம்ருத தாரைகளைப் பருகும் பாக்கியமும் வாய்த்தது. ஸ்வாமியிடத்தில் அடியேன் கண்ட அதிசயம் நம்முடைய உபய வேதாந்த க்ரந்தங்களிலும், அனந்தாழ்வானுடைய வேதாந்தவாதாவளியிலும், மற்றும் நவீந க்ரந்தங்களிலும் யாவரும் வியக்கத்தக்கதான உபஸ்திதி விசேஷம் இவ்விஷயத்தில் ஸ்ரீகாஞ்சியிலெழுந்தருளியிருந்த விரக்தி பாஷ்யகாராசார்ய ஸ்வாமியை ஒப்புச் சொல்லலாமாயினும், அந்த ஸ்வாமிக்கு க்ரந்த ப்ரவசனங்கள் தவிர உபந்யாஸங்களுக்கு வாய்ப்பு ஏற்படவில்லை. இந்த ஸ்வாமிக்கு இரண்டுக்கும் அவகாசம் அமைந்திருந்தது. ஸ்வாமிக்கு ஜ்யோதிச் சாஸ்த்ரத்திலும் அபாரமான புலமையிருந்தது. ஸ்வாமியின் திருத்தமையனாருடைய திருக்குமாரர் (அம்மாஞ்சி) வேங்கடாசாரியரென்பவர் ஸ்வாமி பக்கலிலேயே உபயவேதாந்தங் களுமதிகரித்து வாக்மியாக இருந்தவர் அகாலத்தில் பரமபதித்து விட்டார். ஸ்வாமியினுடைய தௌஹித்ரராய் ஸ்வீக்ருத புத்ரரான ஸ்ரீவேங்கடாசார்ய ஸ்வாமியின் ப்ரபாவாதிசயம் ஜகத் விக்யாதம்.

ஸ்ரீமதுபயவே. எம்பார்—க்ருஷ்ணமாசாரிய ஸ்வாமி

ஸ்ரீரங்கத்திலே திருவவதரித்து ப்ரசண்ட பண்டிதோத்தமராகப் புகழ்பெற்றவர் இந்த ஸ்வாமி. "அதிகமத்யாபித மார்ஜிதம் யச:" என்ற பழமொழிக்கு இலக்கானவர்களில் தலைநிற்பவர் இந்த மஹா ஸ்வாமி. எம்பார் திருவம்சத்தவராகையாலே கோயிலில் ஸ்தலாசார்ய புருஷராக வெழுந்தருளியிருந்தார். நியாயவேதாந்தங்களில் வாதப்போர் நிகழ்த்தவல்ல மஹாவித்வத் கேஸரியாக விளங்கினவர் ப்ரக்யாதராக எழுந்தருளியிருந்த கோஷ்டீபுரம். ஸௌம்ய நாராயணாசார்யஸ்வாமி, திருவஹீந்திரபுரம். கச்சிக்கிடாம்பி பாஷ்யகாரார்ய ஸ்வாமி, உத்தமசீலி ரங்கஸாமி ஐயங்கார் ஸ்வாமி முதலானோர் ஸ்வாமியிடத்தில் சாஸ்த்ரங்களதிகரித்துத் தேறினவர்கள். ஸ்வாமியினுடைய ப்ரசண்ட பாண்டித்யத்தை யறிந்து குர்ஜர தேசத்தவர்கள்—ஸ்வாமிநாராயண ஸம்ப்ரதாயஸ்தர்கள்—ஸ்வாமியை அந்த ப்ராந்

http://acharya.org

தத்திற்கு வரவழைத்து வடநாடு என்னுமிடத்திலுள்ள ஸம்ஸ்க்ருத வித்யாலயத்தில் ஸ்வாமியை ப்ரதாநாத்யாபகராக வைத்ததனுல் அந்நாட்டினர் பலர் வேதாந்தமதி கரித்துத் தேறினர்கள். அக்காலத்தில் ஸ்வாமி தர்சன க்ரந்தங்கள் பலவற்றை யெழுதுவதற்கு அவகாச மேற்பட்டது. அவை பெரும்பாலும் அந்தேவாஸிகளால் அச்சிடப்பட்டுமுள்ளன.

ஸ்ரீமதுபயவே. கபிஸ்தலம் அனந்தாசார்ய ஸ்வாமி

இந்த ஸ்வாமி திருநாட்டுக்கெழுந்தருளி 70 ஸம்வத்ஸரமாறுலும் ஸ்வாமி யினுடையபுகழ் தென்னுட்டில் மலிந்துள்ளது. ஸ்வாமி கபிஸ்தலத்தில் அவதரித்த வராயினும் திருநாங்கூரிலும் திருவரங்கம் பெரியகோயிலிலுமே பெரும்பாலும் வாழ்ந்தவர். திருமலே அனந்தாழ்வானுடைய திருவம்சத்தவர். பகவத்விஷயம் ஸாதிப்பதில் அப்ரதிமமான வல்லமைபெற்றவர். அடியேன் இளமையில் ஸ்வாமி யினுடைய காலக்ஷேப கோஷ்டியில் அந்வயித்திருக்கிறேன். விஷயங்களைப் பூப்பறித் தாற்போலே ஸாதிப்பதில் மிகவிரகர். ம்ருதுமதுரபாஷி. அநேகபர்யாயங்கள் ஈட்டு ப்ரவசனம் செய்தருளினவரென்று ப்ரஸித்தியுண்டு. அஸ்மதாசார்யரான ஸ்ரீ ஜகத் குரு. காதிஸ்வாமி ஒருஸமயம் திருநாங்கூர்க்கு எழுந்தருளியிருந்தபோது அடியே னும் கூட விடைகொண்டிருந்தேன். அப்போது இந்த ஸ்வாமி அவ்விடத்திலெழுந் தருளியிருந்தார். இவர் காதிஸ்வாமியிடம்வந்து வார்த்தையாடுகையில் ¤பூவார் திருமாமகள்புல்கியமார்பா!¤ என்கிற திருவெள்ளக்குளப் பாசுரத்தையும் ¤அகல கில்லேனிறையுமென்கிற திருவேங்கடமுடையான் பாசுரத்தையும ஸமந்வயப் படுத்தி மிகவினிதாக உபந்யஸித்தருள, காதிஸ்வாமி பரம ஸந்தோஷமடைந்து விசேஷஸத்காரம் செய்தருளினர். அவருடைய ஸ்வீகார திருக்குமாரரும் வாக்மி யாக இருந்து சிலவாண்டுகட்குமுன்பு திருநாடலங்கரித்தார். இவருடைய ஸ்வீகார திருக்குமாரர் இப்போது வாக்மியாயிருந்து வருகிறார.

ஸ்ரீமதுபயவே. கோயில் கோவிந்தாசார்ய ஸ்வாமி

திருக்கோட்டியூர் கோவிந்தாசார்ய ஸ்வாமியென்றும், நம்மாழ்வார் ஸன்னிதி கோவிந்தாசார்ய ஸ்வாமியென்றும் வழங்கப்பெற்றவிவர் கோயிலில் நித்யவாஸ நிரதராய் நித்யப்ரவசன நிஷ்ணதராயெழுந்தருளியிருந்தார். வியாகரண சாஸ்த் ரத்தில் பாரங்கதர். ஸம்ப்ரதாயக்ரந்தங்களை வரியடைவேகற்று வரியடைவே ப்ரவசனம்செய்து போந்தவர். பகவத்விஷயம் மட்டுமன்றிக்கே மற்றும் மூவாயிர வியாக்கியானங்களையும் ரஹஸ்யங்களையும் நாள் தவருமல் தொண்டரடிப்பொடி யாழ்வார் ஸன்னிதிமுதலானவிடங்களில் காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டே வாழ் நாளைக் கழித்தவர். பாஞ்சராத்ராகமங்களில் மிக்க பரிசீலனையுள்ளவரென்பது இவர் பரிஷ்கரித்து வெளியிட்டுள்ள பாரமேச்வர ஸம்ஹிதைப்பதிப்பினுல் உலக மறிந்தது. கோயிலுக்குத திலகமாக நெடுநாள் எழுந்தருளியிருந்தவர்; வடதிருக் காவேரியில் நித்யாநுஷ்டானம் தவருதவர். *தோதவத்தித் தூய்மறையோர்* என்ற பெரியாழ்வாரருளிச் செயலுக்கு இலக்காக எழுந்தருளியிருந்தவர்.

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீமதுபயவே. மெய்யுவாசார்யஸ்வாமி

திருவரங்கம் பெரிய கோயிலிலேயே மெய்யுவையங்கார் ஸ்வாமியென்று மிக ப்ரஸித்தராக எழுந்தருளியிருந்த இந்த ஸ்வாமி திருநாடலங்கரித்து முப்பத்தைந்து வருஷமாகிறது. நியாயவ்யாகரண வேதாந்தங்களில் தலஸ்பர்சியான ஞானமுடையராயிருந்ததோடு ஸாஹித்யத்திலும் அப்ரதிமமானபாண்டித்யம் பெற்றவர். அடியேன்பால் இளமையிலிருந்தே பரமக்ருபையுள்ளவர். அடியேன் மஞ்ஜுபாஷிணீ பத்திரிகை நடத்திக்கொண்டிருந்தகாலத்தில் ஸ்வாமி காரைக்குடியில் எழுந்தருளியிருந்தார். அப்போது பத்ரிகைக்கு வியாஸங்களெழுதியனுப்பிக் கொண்டிருந்தபடியால ஸ்வாமியினுடைய வைதுஷ்யத்தையும் ஸம்ஸ்க்ருதலேகன ஸாமர்த்தியத்தையும் நன்கு அனுபவித்தவனடியேன். பிறகு கோயிலில் நித்யவாஸ நிரதராயெழுந்தருளியிருந்து திருமாளிகையிலும், கீர்த்திமூர்த்தி, குவளக்குடி சிங்கமையங்கார்ஸ்வாமியின் தென்ஞசார்யஸப்ப்ரதாய பாடசாலையிலும் உபயவேதாந்த க்ரந்த காலக்ஷேபமும் இதிஹாஸபுராண ப்ரவசனமும் நெடுநாள்செய்து போந்தார். ஸ்வாமியினுடைய திருக்குமாரர் ஸ்ரீ உ. வே. மெ. ஸுந்தரராஜாசார்யர் தீபாதுத்பந்ந ப்ரதீபமாகவிளங்கி பத்தாண்டுகட்குமுன் திருநாடலங்கரித்தார். அவர் அடியேனுக்கு தக்ஷிணேபாஹு: என்னும்படியிருந்தவர்.

ஸ்ரீ உவே. பஹுகுடும்பி ஸ்ரீநிவாஸாசாரியர்ஸ்வாமி

முன்னம் ப்ரஸ்தாவித்த சிங்கப்பெருமாள் ஸ்வாமியின் பாகிநேயர் இவரென்று நினைவு. இவர் ஸ்ரீ ராஜமன்னார் ஸந்நிதிக்கடுத்த சேனங்குளத்தில் வாழ்ந்து மாதுலர்முதலானோரிடத்தில் வித்யாக்ரஹணம்பண்ணி ப்ரபலபாண்டித்யம் ஸம்பாதித்துத் திருவரங்கம் பெரியகோயிலில் நித்யவாஸமாக எழுந்தருளியிருந்து உபய வேதாந்த ப்ரவசனம்செய்து கொண்டிருந்தார். அடியேனுக்குப் பரமஸ்நிக்த கோடியில் சேர்ந்திருந்தார். இவருடைய பாண்டித்யமும் ரஸிக்யமும் அந்யாத்ருசம். பல நூற்றுக் கணக்கான ச்லோகங்களும் செய்யுள்களும் இந்த ஸ்வாமிக்கு வாசோவிதேயம். கோயிலில் ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதி முன் மண்டபத்தில் அடிக்கடி உபந்யாஸங்கள் ஸாதித்துக் கொண்டிருந்தவர். அடிக்கடி அடியேன் நெருங்கிப் பழக நேரும்போது தம்முடைய சாடூக்தி சாதுர்ய விசேஷங்களைக்காட்டியருள்வர். ஸ்ரீமத் பரமஹம்ஸ. வானமாமலை. சின்ன கலியன் ஸ்வாமி நியமனத்தினால் இந்த ஸ்வாமி சிலவருஷகாலம் நந்திபுர விண்ணகரமென்கிற நாதன்கோவிலில் எழுந்தருளியிருக்க நேர்ந்தது. அப்போது அடியேன் யாத்திரையடைவில் அங்கே விடைகொள்ள நேர்ந்தது. மூன்று நான்கு நாட்கள் *இருநிலத்திலினிதின்பமெய்தலாமே* என்கிற திருநெடுந்தாண்டகப் பாசுரத்தை நினைப்பூட்டுவனவாயிருந்தன. இவர் திருநாடலங்கரித்து முப்பது வருடங்களுக்கு மேலாயிற்று.

ஸ்ரீமதுபயவே. பஹுகுடும்பி வரதாசாரியர்ஸ்வாமி

இந்த ஸ்வாமியும் நியாய வேதாந்தங்களில் நிபுணராய் உபய வேதாந்த க்ரந்த காலக்ஷேபமே போதுபோக்காக எழுந்தருளியிருந்தவர். இந்த ஸ்வாமியின் ப்ரவசனங்கள் திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில் நெடுநாள் நடந்துகொண்டிருந்ததை நேராக அறிவேன். பரம ப்ராமாணிகபத்ததியில் ஆடம்பரடம்பங்களின்றிக்கே ஸாத்விகஸரணியில் காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டிருந்தவர்.

http://acharya.org
Released by Maran's Dog ,Toronto, Canada

ஆனந்தவஹூ பங்குனி விசாக நினைவு மலரின் தொடர்ச்சி (2)

14. கண்ணனும் விதுரனும்

பாண்டவர்க்காய்த் தூதுசென்ற கண்ணபிரான் விதுரர் திருமாளிகையிலே புக்கவாறே "முன்னமே துயின்றருளிய முதுபயோததியோ, பன்னகாதிபப்பாயலோ பச்சையாலிலையோ, சொன்ன நால்வகைச் சுருதியோ கருதி நீ யெய்தற்கு என்ன மாதவம் செய்ததிச் சிறுகுடிலென்றான்" (வில்லிபாரதம்) என்றபடி பலவிதமாக நைச்சியாநுஸந்தானம் செய்து விதுரர் கண்ணனுக்கு ஏதோவுண்ணக் கொடுத்தார். கண்ணனும் அதனைப் பரமானந்தமாகவுண்டான் என்று உலகம் சொல்லி வருகிறது. இவ்விடத்தை மஹாபாரதத்தில் எழுதுகின்ற வ்யாஸபகவான் எங்ஙனே யெழுதினரென்று சிறிது பார்ப்போம். விதுரர் அன்னமிட்டாரென்பதைச் சொல்லுமிடத்து "விதுரோந்நமுபாஹரத்" என்று சொன்ன வியாஸர், கண்ணன் அதனை யமுது செய்தானென்பதைச் சொல்லுமிடத்து "விதுராந்நாநி புபுஜே சுசீநி குணவந்தி ச" என்றார். "அப்திர் லங்கித ஏவ வாநர படை:" என்ற ரீதியிலே நின்று புராணப்ரஸங்கம் செய்து போருமவர்கள் 'விதுரர் அன்னமிட்டார்; அது பரம பரிசுத்தமாயும் பரம போக்யமாயு மிருந்தபடியாலே அதனைக் கண்ணனமுது செய்தான்" என்றிவ்வளவே சொல்லிப் போவர்கள். விதுரர் அன்னமிட்டாரென் பதைச் சொல்லும்போது "அந்நம் உபாஹரத்" என்று ஏகவசந ப்ரயோகம் செய்த முனிவர் உடனே கண்ணனமுது செய்ததைச் சொல்லுமிடத்து 'அந்நாநி புபுஜே' என்று பஹுவசநப்ரயோகம் செய்ததேன்? என்று ஆராய்ந்து நிதியெடுத்து ஊட்டவல்லவர்கள் மிகச் சிலரே. விதுரர் அன்னமிட்டபோது அதுமிகவும் அல்பமாயிருந்ததென்பதைக் காட்ட அங்கு ஏகவசநப்ரயோகம் பண்ணினர். அது தானே "அண்வபி ப்ரேம்ணா பூர்யேவ மே பவேத்" என்ற கண்ணபிரானுடைய திருக்கைத் தலத்தில் சேர்ந்தவாறே அநல்டமாய் விட்டதென்பதைக் காட்ட அங்கு 'அந்நாநி புபுஜே' என்று பஹுவசநப்ரயோகம் பண்ணினர்—என்று மருமமறிந்து எடுத் துரைக்க வல்லவர்கள் யாராயிருக்க வேண்டும்? பகவத் குணஸாகரத்தில் நன்கு படிந்தவர்களாய் பகவானுடைய விசேஷ கடாக்ஷத்திற்குப் பாத்ரபூதர்களாய் அவனுடைய திருக்குணங்களையே ஜ்வரஸந்நிபதிதரைப் போலே வாய் வெருவுமவர் களாயிருக்க வேண்டும்.

"இக்கருத்தை யுட்கொண்டுதான் வியாஸர் சுலோகமியற்றினரோ? ஏதோ ச்லோகம் கூடுகிறபடி சொல்லிவைத்தார்; அதற்கு இப்படி விசேஷார்த்தம் சொல்லுவது குநிஷ்டை" என்று ஸஹஸா சொல்லிவிட வல்லவர்கள் எங்கும் பரப்பியுள்ளார் களென்பதை நாமறிவோம். 'விதுரோந்நமுபாஹரத்' என்றதற்குப் பொருந்த 'புபுஜே விதுராந்நம் தத்' என்று ச்லோகமியற்ற அருமையில்லை. "ஜாமாதா வேத்தி நோ பிதா......வ்யாக்யாதா வேத்தி நோ கவி:" என்ற கணக்கிலே வ்யாஸர் இவ் விசேஷப்பொருளைக் கருதிற்றிலர் என்றே கொண்டாலும் இந்த இன்சுவைப் பொருளைக் கொள்ளக் குறைவில்லாதபடியன்றோ வசநஸந்தர்ப்பம் அமைந்திருக் கின்றது. பகவானுடைய ஆச்சரியமான குணவிசேஷமன்றோ குன்றிலிட்ட விளக்கா கின்றது இப்பொருட்சுவையில்.

http://acharya.org

"கண்காண நிற்கில் ஆணையிட்டு விலக்குவர்களென்று கண்ணுக்குத் தோற்றாத படி நின்று" (ஸ்ரீவசநபூஷணம்) என்கிறபடியே கட்கிலியான எம்பெருமானை நாம் ஸாக்ஷாத்கரித்து அநுபவித்து ஆனந்திக்க பாக்கியம் பண்ணிற்றிலோம். "கோவிந்தன் குணம்பாடி ஆவிகாத்திருப்பேனே" என்று ஆண்டாளருளிச் செய்த கட்டளையிலே குணநுபவம் பண்ணிப் போதுபோக்க நிற்கிறோம் மத்தனை. இந்த குணகீர்த்தனமும் எம்பெருமானார் தர்சனஸ்தர்களுக்கும் அஸஹ்யமாகிற தென்றால் இதனில் மிக்கோர் வியப்புண்டோ? பக்தனிட்ட அல்பமான அன்னம் ஸ்வீகர்த்தாவின் திருவுள்ளத்தால் அநல்பமாயிற்று என்று ஒரு குணரஸிகர் உபந்யஸித்தால் இதில் அநுபபத்திகளைக் கூறவழி தேடுவாருளரோ? *தே பூயிஷ்டாம் நமஉக்திம்* என்பதைப் பழிக்கப் பார்க்குமவர்கள் இங்கு வாளாவிருப்பர்களோ? 'நாம் கனக்க இட்டாலுங்கூட அதில் குற்றங்குறைகண்டு தள்ளுகிறவனன்றோ பகவான்!' என்பதையே ரஸசனமான பொருளாகக் கொண்டு இதனையே சிஷ்யகோஷ்டிகளுக்கு ப்ரவசனம் செய்து க்ருதக்ருத்யராமவர்களை நிரோதிப்பாராருமிலரே. ... ...

15. கோவிந்தராஜீயம்

ஸ்ரீ ராமாயண வியாக்கியானங்களுள் ஸ்ரீகோவிந்தராஜீயம் மிகச் சிறந்த வியாக்கியானமாகக் குலாவப்படுகிறது. ஸ்மார்த்த மாத்வப்ரப்ருதிகளும் இந்த வியாக்கியானத்தை மெச்சுகிறார்களென்று தெரியவருகிறது. கோவிந்தராஜர் என்னும் பெரியார் செய்த வியாக்கியானமாதலால் கோவிந்தராஜீய மென்று பேர்பெற்றிருக்கிறது. சிலவிடங்களில் இவர் பூருவர்களின்வியாக்கியானஸரணியை மறந்து வேறாக வியாக்கியை செய்திருப்பது முண்டென்று அடியேனுடைய ஆராய்ச்சியில் தோன்றியதைச் சிறிது விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன். இதனால் கோவிந்தராஜீயத்திற்கு ஒரு மறுப்பு எழுதுவதாக ஒருவருமெண்ணத் தகாது.

பெருமாள் இராவணஸம்ஹாரம் செய்து தலைக் கட்டிப் புஷ்பகவிமானத்தில் திருவயோத்திக்கு மீண்டெழுந்தருளும்போது பரத்வாஜாச்ரமத்தில் ஆதித்த்யம் ஸ்வீகரிக்கத் தங்கினாரன்றோ! அப்போது பரதாழ்வானுடைய நிலைமையை பரத்வாஜ முனிவர் கூறுகின்றார்—"பங்கதிக்தஸ்து ஜடிலோ பரதஸ் த்வாம் ப்ரதீக்ஷதே" என்று. இங்கு பரதாழ்வானுக்கு பங்கதிக்த: என்று விசேஷணம் கொடுக்கப் பட்டிருக்கிறது. சேறு பூசப்பெற்றவன் என்றபடி. பரதாழ்வான் எதனாலே சேறு படிந்தவனானானென்று ஜிஜ்ஞாஸை பிறக்குமே; இதற்கு கோவிந்தராஜர் இரண்டு வகையாக எழுதியுள்ளார். பரதாழ்வான் சடை புனைந்திருப்பதனால் ஸ்நானம் செய்வதே கிடையாது. அதனால் உடம்பெல்லாம் புழுதியேறிக்கிடக்கிறது. *கதம் நு அபரராத்ரேஷு ஸரயூமவகாஹதே* என்கிற ஸ்ரீராமவசனத்தில் பரதாழ்வான் ஸரயுவிலிறங்கி ஸ்நானம் செய்வதாகத் தெரியவருகிறதே யென்னில், அது நித்ய ஸ்நானபரமன்று; கதாசித் செய்யப்படுகிற நைமித்திக ஸ்நாநத்தைச் சொன்ன தாகலாம்—என்பது முதல் வகை. இனி இரண்டாம் வகையாவது—பரதாழ்வான் மண்தரையிலேயே சயனிப்பவனாகையாலே சேறுபடிந்த மேனியனாயினன் என்பதாம்.

பரதாழ்வான் நாடோறும் த்ரிஷவணஸ்நானமும் செய்திருக்கக்கூடும்; நித்யஸ்நானமும் செய்யாதிருந்தனன் என்பதை யாவரும் த்ருப்தியுடன் அங்கீ

http://acharya.org

கரிப்பர்களாவென்று ஆலோசிக்க வேண்டியிருக்கிறது. தரைக்கிடை கிடப்பதனுல் *பாம்ஸுதித்த:' என்று சொல்லத் தகுமேயொழிய பங்கதிக்த: என்று சொல்ல ஔசித்யமிருக்குமாவென்பது ஆலோசிக்கத் தக்கது. 'கங்குலும் பகலும் கண்துயி லறியாள் கண்ணநீர் கைகளாலிறைக்கும்* என்னும்படியான நிலைமையே பர தாழ்வானுடைய நிலைமையாதலால் அருவி சோருங்கண்ணீரைப் பெருக்கித் தரைக் கிடப்பதனுல் சேறுபடிந்த மேனியனுகிருன். ஸ்ரீ குலசேசராழ்வார் 'ஏறடர்த்தது மேனமாய் நிலங்கீண்டதும்* என்ற பாட்டில் 'வண் பொன்னிப் பேராறு போல்வருங் கண்ண நீர் கொண்டு அரங்கன் கோயில் திருமுற்றம் சேறு செய் தொண்டர்* என்றருளிச் செய்திருக்கிருர் அப்பாசுரத்திற்கும் பங்கதிக்த: என்பதற் கும் ஒரு சேர்த்தியிருப்பதாகப் பூருவர்கள் திருவுள்ளம் பற்றுகிருர்கள். அது ஆசார்யஹ்ருதயத்தில் (127ல்) வ்யக்தம்.

ப்ரஸங்காத் ஸ்ரீகோவிந்தராஜரைப்பற்றிச் சிலவார்த்தைகள் சொல்லுகிறே மிங்கு. இவருடைய காலம் ஐந்நூறு வருஷங்களுக்குக் கீழ்ப்பட்டது; மணவாள மாமுனிகளுக்கு மிகவும் பிற்பட்டவர். பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானங் களையும் ஈடு முப்பத்தாருயிரப்படியையும் மணவாளமாமுனிகளின் ரஹஸ்ய வியாக் கியானங்களையும் நன்ருக ஸேவித்தவர். அவற்றிலுள்ள இன்சுவைப் பொருள்களை அப்படியப்படியே ஸம்ஸ்க்ருதப்படுத்தியுள்ளார். இதைத் தாமே தம்முடைய வியாக்கியான உபக்ரமத்தில் *பூர்வாசார்ய க்ருதப்ரபந்த ஜலதேஸ் தாத்பர்ய ரத்நாவலிர் க்ராஹம் க்ராஹமஹம்* என்கிறச்லோகத்தினுல் வெளியிட்டிருக்கிருர். அயோத்யா காண்டப் 113–ஆம் ஸர்க்கம் 18, 19-ஆம் ச்லோகங்களில் வியாக்கியா னத்திலும் மற்றும் சில விடங்களிலும் இவர் தம்மை ஸ்ரீமத் வரவரமுனி ஸம்ப்ர தாயஸ்தராக விளங்கக் காட்டிக்கொண்டவர். அது நிற்க, இவருடைய வியாக்கி யானத்தில் பெரியவாச்சான்பிள்ளை முதலானுருடைய ஸ்ரீஸூக்திகளை மொழி பெயர்த்து எழுதியுள்ள பாகங்களில் [விஷயத்தை க்ரஹிக்கமாட்டாத முத்ராபகர் களால்] அச்சுத்தவறுகள் ஏறியிருக்கின்றன. அத்தவறுகள் எல்லாப் பதிப்புகளிலும் ஒரே ரீதியாகவே யிருக்கிறது. ஓரிடம் காட்டுகிறேனிங்கு; திருப்பாவை (2) *பாற் கடலுள் பையத்துயின்ற பரமன்' என்றவிடத்து ஆருயிரப்படியில் "[கௌஸல்யா ஸுப்ரஜாராம!] உண்ணப்புக்கு வாயை மறப்பாரைப் போலே, வந்த காரியத்தை மறந்தான்; ஒரு திருவாட்டி பிள்ளை பெறும்படியே! என்கிருன்"என்கிற ஸ்ரீஸூக்தி யுள்ளது. இந்த பங்க்திகளை மொழிபெயர்த்த கோவிந்தராஜர் (பால. 23-2.) *போஜநகாலே விஸ்ம்ருத முகோ முநிராஸீத்* என்று எழுதிவைத்தார். 'உண் ணப்புக்கு வாயை மறப்பாரைப்போலே' என்ற தமிழ்வாக்கியத்திற்கு நேரான ப்ரதிச்சந்தமிது. உண்பதற்கு உட்கார்ந்தவன் இலையிலுள்ள பக்ஷ்யவர்க்கங்களை யெடுத்து உண்ணவேண்டியிருக்க அதைவிட்டு அந்த பக்ஷ்யங்களின் ஸௌஷ்ட வாதிகளை வர்ணித்துக் கொண்டு கிடப்பது முண்டு. அப்படியே விச்வாமித்ரனும் தன் வேள்வியை மறந்து *என்ன நோன்பு நோற்ருள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்!* என்று பெற்றவளைக் கொண்டாடத் தொடங்கிவிட்டானென்று ஆசாரியர்களின் வியாக்கியானம். அதை மொழிபெயர்த்த விதில் (போஜநகாலே) என்பதும் (விஸ்ம்ருதமுக:) என்பதும் அருளிச்செயல் வியாக்கியானச் சுவடறியா

http://acharya.org

தார்க்குப் பொருள் படாமையினலே, பொழுதுவிடியும் போது போஜநப்ரஸக்தி ஏதென்று மயங்கி மிகவும் விரஸமாகத் திருத்தி அச்சிட்டு விட்டார்கள். இப்படிப் பட்ட விஷயங்கள் தனி விமர்சத்திலே வெளிவரும். ... ... *

மணிப்ரவாள பாஷையின் மாண்பு

உலகில் பலபல பாஷைகள் பயில்வதைக் காண்கிறோம். நமது பூருவாசாரியர்களின் காலத்தில் பதினெட்டு பாஷைகள் இருந்தனவாக ஊஹிக்க இடமுளது. திருப்பாவையில் (12)*கனைத்திளங்கற்றெருமைப்பாசுரத்தில்* ஈதென்ன பேருறக்கம்! என்றவிடத்து– அழகியமணவாளப் பெருமாள் நாயனர் அருளிச் செய்த ஆருயிரப்படி வியாக்கியானத்தில் "இதொரு பத்தொன்பதாம் பாஷையாயிருந்ததீ!" என்கிற ஸ்ரீஸூக்தி காண்கையாலே அப்போது பதினெட்டு பாஷைகள் ப்ரஸித்தமாயிருந்ததாக அறியலாகின்றதன்றே! இக்காலத்தில் அந்தக் கணக்கில் அடங்கியிராது. அது நிற்க. நாமறிந்த பற்பல பாஷைகளில் மணிப்ரவாளபாஷை என்பதொன்று. தமிழ்வார்த்தைகளும் ஸம்ஸ்க்ருத வார்த்தைகளும் விரவிய நடை மணிப்ரவாள மெனப்படுகிறது. நாலாயிர திவ்யப்ரபந்த வியாக்கியானங்கள், அஷ்டாதச ரஹஸ்யங்கள், ரஹஸ்ய வியாக்கியானங்கள் இவை மணிப்ரவாள பாஷையில் அமைந்தவை. திருக்குருகைப்பிரான் பிள்ளானென்னுமாசிரியர் [எம்பெருமானருடைய சிஷ்யர்களில் ஒருவர்] திருவாய்மொழிக்கு வியாக்கியானமாக அருளிச்செய்த ஆருயிரப்படி என்று ப்ரஸித்தமான வியாக்கியானம் மணிப்ரவாள நூல்களில் முதன்மைபெற்று விளங்குகின்றது; "ச்ரிய: பதியாய், அவாப்தஸமஸ்தகாமனய், ஸ்ரீ வைகுண்ட நிகேதநனய்" என்ருற்போன்ற ஸ்ரீஸூக்திகளில் ஆய் என்பது மட்டுமே தமிழ்; மற்றபதங்கள் ஸம்ஸ்க்ருதம்.

மணவாளமாமுனிகளின் வியாக்கியானங்களில் காணும் ஸ்ரீஸூக்தி ஸந்நிவேசங்கள் பரமவிலக்ஷணமும் பரமபோக்யமுமாகும். "கர்மகர்த்ரு தாததீந்யத்தாலே" என்றும், "அநாத்யசித்ஸம்பந்த-தத் வியோக-ததநந்வயங்களாலே" என்று மிப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகள் மணவாளமாமுனிகளின் வியாக்கியானங்களிலல்லது வேறு எவ்விடத்திலும் காணக்கிடைக்கமாட்டா வென்று சபதம் செய்வோம். அது தனிப்பட்ட அநுபவம், தனியே செய்வோம்.

திருப்பாவையில் (7) *கலந்து பேசின பேச்சரவம்* என்றவிடத்திற்கு நாம் உள்ளுறைபொருள் [ஸ்வாபதேசார்த்தம்] விவரிக்கும்போது இந்தமணிப்ரவாள நடையையெடுத்து விவரிப்பது விசேஷித்திருக்கும். வடமொழி தென்மொழிகளைக் கலந்துபேசின பேச்சு–என்று. "பேச்சுகேட்டிலையோ" என்னுது, அரவம் கேட்டிலையோ? என்கையாலே சப்தார்த்தத்திற்கு மேல் த்வனிப்பொருள்கள் கேட்க வேண்டியது அவசியம் என்று ஆண்டாளே வற்புறுத்துகிருள் என்பதும் நம்முடைய ப்ரவசனங்களில் விரியும்.

http://acharya.org

மணிப்ரவாளக்ரந்தங்கள் பலவற்றினுள்ளும் ஆசார்யஹ்ருதயக்ரந்தம் தலை சிறந்து விளங்கும். வடமொழி தென்மொழிகளைக் கலந்து ஸாதிப்பது தவிர வட மொழியைச் சேர்ப்பது தானே விலக்ஷணமாயிருக்கும். ஓரிடமே காட்டுகிறேன். அதில் (4-6) "ஸர்வலோகபூதேப்ய: என்றவை கடலோசையும் கழுத்துக்கு மேலு மாகாமல்" என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது. "ஸர்வலோகபூதேப்ய:" என்று ஒரு ப்ர மாணவசனம் கிடையாது. இவ்விடத்து மருமம் கேளீர். விபீஷணாழ்வான் கடற் கரையிலே பெருமாளை நோக்கி சரணாகதி செய்யும்போது "ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே" என்றான்; அந்தவசனத்திலிருந்து (ஸர்வலோக) என்று எடுத்துக் கொள்ளப்பட்டது. சரணாகதனான விபீஷணாழ்வானுக்குப் பெருமாள் அபயப்ரதானம் செய்தருளும்போது *ஸக்ருதேவ ப்ரபந்நாய...அபயம் ஸர்வபூ தேப்ய:* என்றார். அந்தவசனத்திலிருந்து பூதேப்ய: என்கிறபதம் எடுத்துக்கொள்ளப் பட்டது. (ஸர்வ) என்கிற விசேஷணபதம் இரண்டிடத்திலுமுள்ள தாகையாலே அதைக்கூட்டிக்கொண்டு* ஸர்வலோகபூதேப்ய:* என்றருளிச்செய்தாராயிற்று. இது இரண்டுப்ரமாணவசன ஸமவாயம் என்று ஸ்பஷ்டமாகக் காட்டுவதற்கே அடுத்த படியாக (என்றது) என்று ஒருமையாக ஸாதிக்காமல் (என்றவை) என்று பன்மை யாக ஸாதித்தருளினது. எம்பெருமான் நரங்கலந்த சிங்கமாய் நரஸிம்ஹாவதாரம் செய்தருளினது ஆச்சரியமன்று, இந்த ஸர்வலோகபூதேப்ய: என்கிற ஸ்ரீஸூக்தி அவ தரித்தது தான் ஆச்சரியம் அற்புதம் என்று அஸ்மதாசார்யர் அருளிச் செய்யும்படி.

மணிப்ரவாள சுலோகங்கள்

வசன நடையிலுள்ள மணிப்ரவாள வாக்கியங்களைப்பற்றிக் கீழே எழுதப் பட்டது. ரஸிகர்களான பண்டிதர்கள் மணிப்ரவாள சுலோகங்களும் இயற்றுவ துண்டு. நெடுநாளைக்குமுன்னே ஒரு மஹாகவி ஸ்ரீராமாயணம் முழுவதையும் மணி ப்ரவாள நடையில் இயற்றியிருந்தார். "மணிப்ரவாளராமாயணம்" என்றே அந் நூல் வழங்கப்பட்டு வந்தது. அடியேனுடைய திருத்தகப்பனார் அதிலிருந்து பலபல சுலோகங்களை விநோதமாக ஸாதிக்க இளமையில் கேட்டிருந்ததுண்டு. நினைவுக்கு வரும் இரண்டு சுலோகங்களை ஈண்டெழுதுகின்றேன்.

அங்கங் குலுங்க விளையாடு மயூர்வ—மானைத்
தங்ஙங்களான தநுவோடு நிரீக்ஷ்ய முன்னே,
எங்ஙுந் திரிந்து ஸஹஸைவ விடாமலேதான்
முன்கொண்டு வாருமிதி ராமமுவாச ஸீதா.

மானன்றடீ! ஜநகநந்திநி! ராக்ஷஸோயம்
ஏனென்று கேளு வசநம் மம கீரவாணி!
த்வாம் அத்ய வஞ்சனையினால் அபஹர்த்துமிங்கே
மாநுக வந்து விபிநே விளையாடருண்டீ!

http://acharya.org

அஷ்டப்பிரபந்தப் பகுதி ★

> "சிறக்கும் பதந்தருவார் திருவேங்கடச் செல்வர்செய்ய
> நிறக்கும் பதம் தொழுதுய்யவெண்ணீர் நெறியிற்பிழைத்து
> மறக்கும்ப தந்தியும் சேலுமசுணமும் வண்டினமும்
> பறக்கும் பதங்கமும் போல் ஐவரால் கெடுப் பாதகரே.

திருவேங்கடத்தந்தாதியிலுள்ள பாசுரமிது. எம்பெருமானளித்த கரணகளே பரங்களைக் கொண்டு அவனைத் தொழுதாடியுய்யாது பஞ்சேந்திரியங்களின் வலைப் பட்டு அழிதற்கேநோற்கும் தீவினையாளரை விளித்து ஐயங்கார் இதமுரைக்கும பாசுரமிது. மெய், வாய், கண், மூக்கு, செவி எனப்படும் ஐம்பொறிகட்கும் ஊறு (ஸ்பர்சம்), சுவை (ரஸம), ஒளி (ரூபம்). நாற்றம் (கந்தம்), ஒலி (சப்தம்) என்பன விஷயங்களாகும். இவ்வைந்தனுள் ஒவ்வொரு விஷயத்தால் யானை முதலிய ஐந்து பிராணிகள் கெடுதல் கட்கூடு. அதாவது. (1)யானை:- யானைபிடிக்கக் கருதும் வேடுவர் காட்டிடைச் சென்று பெரியதொரு குழி வெட்டி அதனை இலைதழை முதலியவற்றால் நன்கு மூடி அதன்ஒருபக்கம் தாம் ஏற்கனவே பழக்கியிருக்கும் பெண்யானையை நிறுத்திவைப்பர். மறுபக்கத்திநக்கும் ஆண்யானை அதனோடு சேரு மாசையால் ஓடிவருகையில் குழியில் வீழ்ந்துவிடும். அவ்வாறு சிக்கித்தவிக்கும் அவ் யானையைத் தம்வசப்படுத்திக் கொள்வர் வேட்டுவர். எனவே ஸ்பர்சத்தால் அழிவை ஸ்பர்சிக்கின்றது யானைஎன்றதாயிற்று (2) மீன்:- மீன்பிடிப்போர் ஆறு, குளம் முதலியவிடங்களில் புழுப்போன்றவற்றை முள்ளில் பொருத்தி நீருட் புகுத்துவர். அத்தூண்டிலிலுள்ளதைச் சுவைக்கக் கருதும் மீன் அதைப் பற்றும் போது முள் வாயில் பட்டு மீள வழியின்றித் தவிக்கவும் செம்படவர் அதனைப் பற்றிக் கொள்வர். ஆக, சுவையால் அழிவது மீன் என்க. (3) விட்டிற்பூச்சி:- விட்டிலென்னும் ஒரு வகைப் பூச்சி விளக்கொளியைக் கண்டால் மிகுந்த அவாவுடன் அந்த ஜ்வாலையை அணுகி நொடியில் மாய்ந்தொழியும். இது ஒளியால் அழிந்தது. (4) வண்டினம்:- மதுகரங்கள் மலர்களின் நறுமணத்தை மிகவிருப்பி நூற்றிதழ்கொள் அரவிந்தம் போன்ற மலர்களில் நுழைந்தினிதிருக்கும் போது அம்மலர்கள் மூடிக்கொள்ள வெளிவரும் வழியின்றி வருந்தும். இது நாற்றத்தாலழிதற்கு உதாரணமாம். (5) அசுணம்:– எம்பெருமானுடைய படைப்பில் பற்பல விசித்திரங்கள்! காக்கையின் கத்தலையும் குயில்களின் கூவுதலையும் ஒரே தன்மைத்தாகக் கொள்ளும் எருமை போன்றவற்றையும் படைத்தான். இன்னிசையாழினைக் கேட்டின்புற்றிருக்கையில் வலிய பறையொலி கேட்கில் அதனைப் பொருது உயிர்விடும் அசுணத்தையும் படைத்தான். அதுநிற்க; ஒலியால் அசுணம் மடியும் என்பது ஈண்டுக் குறிக் கொள்ளத்தக்கது.

ஆக, ஐம்பொறிகளுள் ஒவ்வொன்றினால் சில பிராணிகள் கெடு கின்றன. ஐம்புலன்களாசையும் தொடர்ந்தால் அக்கொடுமை எத்தன்மைத் தாயிருக்கும்? நெஞ்சினால் நினைக் கொணுதன்றே? எனவே இவ்வைவரால் கெடா

http://acharya.org

நிற்கும் ஐம்பெரும் பாதகர்காள்! நீங்கள் திருவேங்கடச்செல்வர் தம் மலரடிப் போது களை வணங்கி உய்ந்துபோக எண்ணுமின்'' என்று உபதேசித்தாராயிற்று. அதாவது ஐந்துபொறிகளையும் வேறு விஷயத்தில் செலவிடாது வகுத்த விஷயத்தில் (பகவத் விஷயத்தில்) ஈடுபடுத்துவீர்களாக. *அரங்காது வார்கணை கண்வள்ளை கோங்கி னரும்பு மங்கை—அரங்கா துவார்முலை என்று ஐவர் வீழ்ந்தனர்* என்றிராது *ஞாலங் கொள்வான் குறளாகிய வஞ்சனே என்னும் எப்போதும் என் வாசகமே*, *பைகொள்பாம்பேறியுறைபரனே உன்னை மெய்கொள்ளக் காணவிரும்புமென் கண்களே*...என்றபடி வாழ எண்ணுவீராக'' என்கிறார். ''ஒருவற்காற்றியுய்யும் வகையன்றால் உடனின்றைவர் என்னுள் புகுந்து ஒழியா தருவித்தின்றிட'', 'கடி யார் காளையர் ஐவர்'' என்றபடி இந்திரியங்கள் பலவாயும் பலமுடையனவாயும் இருக்கின்றனவே. அவற்றை எளியவர்களாகிய நாங்கள் வெல்லுவதியாங்ஙனம்?'' என்று ஸம்ஸாரிகள் கேட்டார்கள்போலும்! அதற்கு விடையளிக்கிறார் ஐயங்கார்.

''ஐவர் (பஞ்சேந்திரியங்கள்) திசைதிசை வலித்தெற்றுவரென்ப துண்மை யல்லதில்லை அதற்கு மருந்தேதென்னில், திருவேங்கடமாமலை ஒன்றுமே நன்மருந் தென்க. பஞ்சாயுததரனை அவ்வெம்பெருமானை யடையவெண்ணின், பஞ்சேந் திரியங்கள் வலியழிந் தொழியுமன்றே! அப்பெருமான் உங்களை நன்கு ரக்ஷித்தருள் வன். ரக்ஷிக்கையாவது *விரோதியைப் போக்குகையும் அபேக்ஷிதத்தைக் கொடுக் கையுமன்றே? விரோதியாகிய ஐம்புலனாசையை யொழித்து அபேக்ஷிதமாகிய சிறக்கும் பதம் தருவான் வேங்கடத்தாடுகூத்தன்—என்று.'' அதாவது பதமென்றது சொல்லென்றதாய் அச்சொற்கள் யாவற்றினும் சிறந்த நாராயண பதத்தை (நாமத்தை) சொல்லிற்றாய். நாவுக்கினிதாய்ச் செவிக்கினிதாமதனைத் தரும் என்றபடி. பதமென்றது ஸ்தாநம் என்றதாய்ப் பரமபதத்தைச் சொன்னபடியுமாம்.

பஞ்சேந்திரியங்களின் கொடுமைக்குப் புகலிடம் எம்பெருமான் அடியிணையே என்பது ''திருவேங்கடச் செல்வர்செய்ய நிறக்குப்பதம்'' என்பதனால் போதரும். எம் பெருமான் அபேக்ஷிதத்தை அளிக்கவல்லனோ என்ற சங்கையற ''செல்வர்'' (விபூதிமாந்) என்றும், செல்வமிருந்தாலும் வளளன்மையுண்டோவென்னும் சங்கை யற ''திருவேங்கடச்செல்வர்'' என்றும் கூறினாரென்க. இதனால், வானவர் மணிமுடி பணிதரத் தெளிவிசும்பிலிருக்கும் பெருமான் மந்திபாய் வட வேங்கடமலையில் வந்தே யுறைதல் அவனுடைய பெருங்கருணையை உணர்த்துமென்க ஆனபின்பு அவனைப் பணிந்துய்யக் குறையுண்டோ? என்பது கருத்து

[இப்பாசுரத்தில் ஐம்புலன்களை ஐவர் என்று உயர் திணையாகக்கூறியது அரு ளிச்செயலை அடியொற்றியென்க. நம்மாழ்வார் திருவாய்மொழியில் ஒரு பதிக முழுதும் (7-1) இந்த்ரியபயாக்ரோசமாகவே அருளிச்செய்கிறார். பதிகந் தொடங் கும்போதே 'உண்ணிலாவிய ஐவரால் குமைதீற்றி என்னையுன் பாதபங்கயம் நண்ணிலாவகையே நலிவானின்ன மெண்ணுகின்றாய்'' என்கிறார். திருமங்கையாழ் வார் நம்மாழ்வாரைப் பின்சென்று தமது திருமொழியில் ஏழாம்பத்திலேயே (ஏழா வது பதிகம்) எம்பெருமானிடப் முறைபிடுகின்றார் என்பது அறிக.] ... ...

http://acharya.org

கம்பராமாயணப் பகுதி ★ ★

பன்னிரண்டு படலங்கள் கொண்ட அயோத்தியா காண்டத்தில் முதலது மந்திரப்படலம். தசரதசக்ரவர்த்தி தனது திருக்குமாரனான இராமபிரானுக்கு முடி சூட்டித் தான் ஆமுஷ்மிக சிந்தையில் லயிக்கக்கருதி ஸபாமண்டபத்தையடைந்து மந்திரிமார்களை வரவழைத்துத் தனது கருத்தைத் தெரிவிக்கின்றபோது சொல்லும் செய்யுளொன்று வருமாறு

''ஆதலா லிராமனுக் கரசை நல்கியிப்
பேதமை தாய்வரும் பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேன்
யாது நுங்கருத்தென இனைய கூறினன்.''

இனி நான் துறவறம் பூண்டொழுக வேண்டுவது அவசியமாயிருத்தலால் ஸ்ரீராமனுக்கு அரசாட்சிச் செல்வத்தையளித்து அவிவேகம் தாவி வருவதற்கு ஹேதுவான ஸம்ஸாரம் தொடராதபடிக்கு பெரிய தவத்தைச் செய்யத் தொடங்குவதற்காகக் காடு நோக்கிச் செல்வதாயிருக்கின்றேன்; இவ்விஷயத்தில் உங்கள் கருத்து எத்தகைத்து? என்றிவற்றைச் சொன்னான்—என்பது பொருள்.

இச்செய்யுள் தெய்விகவாக்காக அமைந்தது. சக்ரவர்த்தி தான் எண்ணிய எண்ணத்தைத் தெரிவித்தவிதில் இனித்தெய்வவசமாக நிகழப்போகிற நிகழ்ச்சியும் விளங்குமாறு சொல்தொடர் அமைந்திருக்கின்றது. இராகவனுக்கு ராஜ்யத்தைக் கொடுத்து விட்டு யான் அகவிருள் நீங்குதற்கு ஹேதுவான தவத்தைத் தொடங்கும் பொருட்டு அரணியம் செல்வதாக விருக்கின்றேன்; இதில் உங்கள் கருத்து யாது? என்று மந்திரிமார்களைச் சக்ரவர்த்தி கேட்பதாகவுள்ளது. ஆழ்ந்து நோக்குமளவில் தற்செயலாய் நடக்கப்போகிற நடத்தையும் இதில் காணலாம்படியுள்ளது. (எங்ஙனேயென்னில்;) இராமனுக்கு—தற்சாலம் அயோத்தியில் இராத மன்னனாகிய பரதனுக்கு; அரசை நல்கி=(நல்கி என்ற வினையெச்சத்தை எச்சத்திரிபாகக் கொண்டால் 'நல்க' என்றதாகும்) ராஜ்யத்தைக் கொடுக்கும் படி. [பேதமை தாய்வரும்] 'பேதமை' என்பதை 'பேது அமை' என்று பிரிக்க. கூனியின் கலஹவார்த்தைகளினால் பேத புத்தி அமையப்பெற்ற தாயாகிய கைகேயிகுறுக்கே வந்து நிற்பள் என்றபடி. பிறகு என்னாகுமென்னில். பிறப்பைநீக்குவான் மாது அவம் தொடங்கிய வனத்தை நண்ணுவேன்—நண்ணுவேனென்பது பிறவினையில் வந்த தன்வினையாகக் கொள்ளத்தக்கது. நண்ணுவிப்பேனென்றபடி. பிறப்பை நீக்குபவனான நாராயணனுடைய அம்சமான ராமன் 'பிறப்பை நீக்குவான்' என்னுஞ் சொல்லால் விவக்ஷிதன். அவனுடைய மாது—தேவியான ஸீதாபிராட்டி; அவளுக்கு விச்லேஷமாகிற அவத்யம் உண்டாவதற்கு ஹேதுவான வனத்தை நண்ணுவிப்பேன்—வனம்போகக் கட்டளையிடுவேனென்றபடி.

(பேதமை என்பது பேதைமை என்பதன் எழுத்துப்போலி)

இதே போல் கைகேசி சூழ்வினைப் படலத்திலும் ஒரு செய்யுள் இருபொருள் தந்து நிற்கும். அதனைப் பிறிதொருகால் விளக்கக் காண்க. ... ...

http://acharya.org

ரஹஸ்யார்த்தப் பகுதி ★ ★ ★ ★

வேதாந்த விழுப்பொருள்களில் ரஹஸ்யார்த்தங்கள் என்பவை தனிச்சிறப்புப் பெற்றவையாம். எம்பெருமானார் பெரிய நம்பிபக்கலில் திருவிலச்சினை பெற்றவரா தலால் அவரிடத்தில் ரஹஸ்யார்த்தங்கள் கேட்டிருக்கச் செய்தேயும் "ஸ்ரீபாஷ்ய காரர் திருக்கோட்டியூர் நம்பிபக்கலிலே ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்தார்" என்று ஸ்ரீவேதாந்ததேசிகன் பணித்தபடி திருக்கோட்டியூர் நம்பியிடத்தில் ஆளவந்தார் விசேஷித்துச் சேமித்துவைத்தருளியிருந்த அரியபெரிய அர்த்தங்களையும் கேட்டு ப்ரவசனம் செய்துவந்தார். அவை அஷ்டாதசரஹஸ்யங்களில் — விசேஷித்து ஸ்ரீவசனபூஷணத்தில் விளங்கக்காணலாம்.

இங்கு ஒரு சூர்ணிகைகேண்மின்; (ஸ்ரீவசன பூஷணம் 1-70-).

"ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு உகப்பானும் அவனே."

ஸம்ஸாரி சேதநனொருவன் வெகுகாலம் பல வுபாயங்களை அனுஷ்டித்து எம்பெருமானையடைந்து ப்ரஹ்மானந்தத்தை அடைகிறான்—என்று பொதுவாக சாஸ்த்ரங்கள் கூறும். ஆனால் இது மேலெழுந்தவாரியான பொருள். உண்மையான சாஸ்த்ரார்த்தத்தைப் பிள்ளையுலகாசிரியர் மேலெடுத்த சூர்ணிகையில் அருளிச் செய்கிறார். அடைபவனும், அடைவிப்பவனும், அடைந்து உகக்குமவனும் எம்பெருமானே என்றவிதன் கருத்தாவது:— அடைவிக்கிறவன் ஈச்வரனாகிலும், அடைகிறவனும் அடைந்து உகக்குமவனும் இவனன்றோ; ஆனபின்பு இவனுடைய நினைவை இப்படி அடியோடு துடைக்கலாமோ என்னில், அடைகிறவனும் அடைந்து உகப்பவனும் இச்சேதநனல்லன்; உடைமையை அடைகின்ற உடையவனைப் போலே ஸ்வம்மான இவ்வாத்மாவை அடைபவன் ஸ்வாமியான அவனே; இழந்த பொருளைப்பெற்றால் அதை அநுபவிக்கிற ஸ்வாமியே களிக்குமாபோலே இவ்வாத்மாவைப் பெற்றால் உகக்குமவனும் அவ்வெம்பெருமானேயாவன்.

இங்கு விசதவாக் சிகாமணியான மணவாள மாமுனிகளின் பரமபோக்யமான திவ்ய ஸூக்தி வருமாறு:—

"ப்ராப்தா அவனாகையாவது - "ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணி ஸ்த்திதம்" என்கிற ஸ்வதஸ்ஸித்தமான ஸ்வஸ்வாமித்வஸம்பந்தமடியாக, உடைமையை ப்ராபிக்குமுடையவனைப் போலே இவ்வாத்மாவை ப்ராபிப்பான் தானாயிருக்கை. ப்ராபகன் அவனாகையாவது—தான் இவனை ப்ராபிக்குமிடத்தில் ப்ராப்திக்கு உபாயமும் (ப்ராபிப்பிக்குமுபாயமும். என்று பெரியோர் திருத்துவர்) ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வஸத்யஸங்கல்பத்வாதி குணவிசிஷ்டனாய் நிரங்குச ஸ்வதந்த்ரனான தானாயிருக்கை. ப்ராப்திக்குகப்பான அவனாகையாவது— ஸ்வத்தினுடைய லாபத்திலே தத்போக்தாவான ஸ்வாமி ஹ்ருஷ்டனுமாப்போலே, இவனை ப்ராபித்தால், ப்ராபிக்கப்பெற்றோமே! என்று உகப்பானும் இவ்வாத்மாவுக்கு நிரதிசய போக்தாவான தானாயிருக்கை. இவை மூன்றும் (அவனே) என்கிற அவதாரணத்தாலே—இவற்றிலிவனோடு அந்வயிப்பதொன்றுமில்லை யென்கை. இதில (ப்ராப்தாவும் ப்ராபகனும் அவனே) என்கையிலே—இவனுக்கு ஸ்வயத்நத்தில் அந்வயமில்லை யென்னுமிடமும், (ப்ராப்திக்கு உகப்பானுமவனே) என்கையாலே ஸ்வப்ரயோஜநத்தில் அந்வயமில்லை யென்னுமிடமும் ஸித்தமாய்த்து. ... ...

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

ஸ்ரீ:

நம்மாழ்வாரும் கம்பரும்

(ஸ்ரீமான் ரா. ராஜகோபாலாசாரி, M.A., காரைக்கால்)

சடகோபரந்தாதியின் சிறப்புப் பாயிரத்தில் (செய்யுள். 1) நம்மாழ்வார் "தேவிற் சிறந்த திருமாற்குத் தக்க தெய்வக்கவிஞன் பாவிற்சிறந்த திருவாய்மொழி பகர்பண்டிதன்" என்று போற்றப்பெறுகிறார். கம்பரும் "தேவிற் சிறந்ததிருமாற்குத் தக்க தெய்வக் கவிஞன்" என்பதற்குத் தடையென்? (இத்தொடரைக் கம்பருக்கு உரிமையாக்கும் போது 'தேவிற்சிறந்த திருமாற்கு' என்றவிடத்தில் ஸ்ரீராமபிரானுக்கு என்று பொருளாம்) இதனைச் சற்று விளக்கமாக நோக்கலாம்.

ஸ்ரீராம காதையைத் தமிழில் கூறும் நூல்கள் கம்பருக்கு முன்னரேயே இருந்திருக்கின்றன என்பதைச் சங்க இலக்கியங்களிலிருந்தும் தொல்காப்பிய உரை யாப்பருங்கல விருத்தியுரை முதலியவற்றிலுள்ள குறிப்புக்களாலும் அறிகிறோம். கம்பரது மஹாகாவ்யம்தோன்றிய பின் அவரது காலத்திற்கு முன்னர் வழங்கிவந்த இராமகாதை நூல்கள் அனைத்தும் "கணங்குழையாள் தோன்றியபின் கதிர்வானிற் கங்கையெனும் அணங்கு இழியப் பொலிவிழந்த ஆறொத்தார் வேறுள்ளார்"

(கம்ப. பால கார்முகப். 18)

என்றபடிக்கே பொலிவிழந்து செல்வாக்கிழந்து மறைந்தன. மேலும் காளிதாஸரின் 'ரகுவம்சம்' தமிழில் நல்ல செய்யுள் நடையில் இன்றுவரை இருந்து வந்தாலும் கம்பரது காவியமே பிராபல்யம் அடைந்திருக்கிறது. எனவே ஸ்ரீராமாயணத்தைத் தமிழில் கூறும் நூல்கள் எத்தனையிருப்பினும் கம்பரது கவித்துவ சக்தியால் கம்பராமாயணமே அவை யெல்லாவற்றிலும் மேம்பட்டுவிளங்குகிறது. எனவே, கம்பர் ஒருவரே ஸ்ரீராமபிரானின் இதிகாஸத்தைத் தமிழில் கூறுதற்குத் தகுதியுடையவரென்றுகிறார். எனவே கம்பரை ஸ்ரீராமனான திருமாற்குத் தக்க தெய்வக் கவிஞன் என்றழைக்கத் தடையென்? "பாவிற் சிறந்த திருவாய் மொழி" போலவே இதிகாஸத்திற் சிறந்த இராமாயணத்தை இன்சுவைப் பாவால் பாடியவர் கம்பரே அல்லரோ? ஆழ்வார், "பாவிற் சிறந்த திருவாய்மொழி பகர் பண்டிதன்" ஆவார். கம்பரும் "பாவிற் சிறந்த ராகவன்புகழ் பகர் பண்டிதன்" ஆகிறார். ("ராகவன் புகழ்" என்பது இவ்விடத்தில் இராகவனின் புகழைக் கூறும் ஸ்ரீராமாயணத்திற்கு ஆகி வந்தது எனக).

Released by Maran's Dog ,Toronto, Canada

"மறைப் பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்து துறைப்பாற் படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமுதம் கறைப்பாம்பணைப் பள்ளியான் அன்பரிட்டங்களித்தருந்த நிறைப்பான்" (திருவரங்கக் கலம்பகம் - காப்பு. 2) என்றபடிக்கே, நம்மாழ்வார் வேதமாகிய பாற்கடலைத் தமது திருநாவாகிய மந்தரத்தாற் கடைந்து திருவாய்மொழியாகிய ஆராவமுதைத் திருமாலன்பருக்கு அருளியவர். "தமிழிலே தாலே நாட்டிக் கம்பநாடுடைய வள்ளல் கவிச்சக்கரவர்த்தி பார்மேல் நம்பு பாமாலையாலே நரருக்கின்றமுத மீந்தான்" (தனியன். 11) என்றபடிக்கே, கம்பரும் தமிழ்மொழியாகிய பாற்கடலைத் தமது திருநாவாகிய மந்தரத்தாற்

http://acharya.org

கடைந்து 'இராமாவதார' இன்னமுதை இராகவன் அன்பருக்கு ஈந்தவராகிருர். இங்கு, 'தமிழிலே தாலே நாட்டி' என்ற தொடருக்குத் "தமிழ் மொழியாகிய பாற்கடலேத் தமது திருநாவாகிய மந்தரத்தாற் கடைந்து" எனப்பொருள் கொள்ளப் பட்டது. இதனைச் சற்று விளக்குவோம்: (தமிழ் மொழியாகிய பாற்கடல் என்றது அருளிச்செயலே என்க) கம்பர் "வாங்கரும் பாதம நான்கும் வகுத்த வான்மீகி" மாமுனிவரின் ஆதிகாவியத்தை மட்டும் ஆதாரமாக வைத்துக்கொண்டு, தமது காவியத்தை யாத்தவரல்லர். தேனும் பாலும் கன்னலும் அமுதுமொத்துத் தித்திக்கின்ற ஆழ்வார்களின் திவ்ய ஸ்ரீஸூக்திக் கடலில் மூழ்கித் திளைத்தாடி "அறிவுடை மாந்தர்க்கெல்லாம் அமிழ்தமொத்திருக்கும்" (கம்பராமாயணம், தற்சிறப்புப்பாயிரம்.) என்றபடிக்கே ஸ்ரீராமாயணமாகிய அமுதை இராகவனன்பர்களித்தருந்தத் தந்தவர். தென்சொற் கடந்து வடசொற்களுக்கு எல்லே தேர்ந்தவரான பெரியோர் வான்மீகத்தைவிட கம்பராமாயணம் சிலவிடங்களில் சுவையும் நயமும் விஞ்சியிருப்பதாகக் கூறுவதற்குக் காரணம் இதுதான். கம்பர் திவ்ய ப்ரபந்தமாகிய பாற்கடலேத் தமது திருநாவாகிய மந்தரத்தாற் கடைந்து (அதாவது திவ்ய ப்ரபந்தத்தைப் பல காலும் ஓதியோதிவந்து) இராமாயணமாகிய அமிழ்தத்தை எடுத்துக் கொடுத்ததேயாம்.

எனவே, ஆழ்வார் வேதமாகிய பாற்கடலேக் கடைந்து 'திருவாய்மொழி' யமுதைத் திருமாலன்பருக்கு ஈந்தார்: கம்பர் அருளிச்செயலாகிய பாற்கடலேக் கடைந்து இராகவனன்பருக்கு இராமாயணமாகிய இன்னமுதை ஈந்தார் என்றதாயிற்று. [அருளிச்செயலிலே ஆழ்ந்து ஈடுபட்டவர் கம்பர் என்பதை அவரது காவியத்திலுள்ள பற்பல பாசுரங்களைக் கண்டு அறிந்துகொள்வது]

"வேதம் தமிழ்செய்தமாறன் சடகோபன்" (கண்ணிநுண். தனியன்) என்றதனுல் நம்மாழ்வார் 'செந்தமிழ் ஆரணம்' அருளியவர் என்பது ஸ்பஷ்டம். ஸகலவேதஸாரமான ஸ்ரீமத் ராமாயணத்தைத் தமிழில் அருளியவர் கம்பர். வேதத்தில் கவிதைச்சுவைமிகுதியாக இல்லை ஆனுல் ஸகலவேதஸாரமான வான்மீகத்தை 'ஆரணக் கவிதை" எனலாம். "நாரணன் விளையாட்டெல்லாம் நாரதமுனிவன் கூற ஆரணக்கவிதை செய்தான் அறிந்த வான்மீகி என்பான்" (கம்பராமாயணத் தனியன். 10) என்றதும் நோக்குக. எனவே வேதம் தமிழ்செய்தவர் மாறன்சடகோபன். வேதஸாரமான வான்மீகம் தமிழ் செய்தவர் கம்பர். அதாவது "செந்தமிழ் ஆரணம்" அருளியவர் நம்மாழ்வார்: ஆரணக் கவிதையைச் செந்தமிழில் அருளியவர் கம்பர்.

ஆழ்வார் திருக்குருகூரில் உதித்த "வகுளாபரண பாஸ்கரா" ஆவார். கம்பரும் "வாழ்வார் திருவெண்ணெய்நல்லூர்ச்சடையப்பன் வாழ்த்துபெறத் தாழ்வார் உயரப் புலவோர் அகவிருள் தானகலப் போழ்வார் கதிரின் உதித்த தெய்வப் புலமைக் கம்பநாட்டு ஆழ்வார் (கம்பராமாயணத் தனியன். 5) என்றதனுல் பாஸ்கரர் (சூரியன்) ஆகின்ருர். இப்படியே நம்மாழ்வாருக்கும் கம்பருக்கும் இடையே பல ஒற்றுமை நயங்களைச் சிந்திக்கலாம். ... ...

http://acharya.org

அடியேனது புன்மொழிகள்

—: முன்னுரை :—

ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் முழுவதும் அடியேனுடைய புன்மொழிகளே யாயிருக்கச் செய்தேயும் விசேஷித்து இப்படியொரு தலைப்பு வைப்பதன் காரணம் யாதெனில்; இந்தமகுடம் புனைந்து வெளியாகும் கட்டுரைகளை அன்பர்கள் விடாமல் கடாக்ஷித்துவரவேணுமென்பதேயாம்.

''அருளிச்செயற் பகுதி, ஸ்ரீராமாயணப் பகுதி, கம்பராமாயணப் பகுதி, வேதப் பகுதி......'' என்றிப்படி மகுடமிட்டு எழுதும் வியாஸங்களை நமது ஸ்ரீராமாநுஜனைப் பெறுமவர்கள் யாவரும் பூர்த்தியாக வாசிப்பர்களென்று சொல்லமுடியாது. **'லோகோ பிந்நருசி:'** ஆகையாலே ஒவ்வொருவர் ஒவ்வோரிடத்தையே வாசித்து வைத்திடுவர்கள். அப்படியன்றிக்கே ''அடியேனது புன்மொழிகள்'' என்றமகுடம் புனைந்து வெளிவருமவற்றை ஸ்ரீராமாநுஜனைப் பெறுமவர் ஒருவர்தப்பாமல் வாசிக்கவேணுமென்பது எனது அவா. அப்படிக்கு என்ன விசேஷம்? என்று கேட்க வேண்டா. 'இப்படி இவன்வேண்டுகிறானே, அதற்காக வாசிப்போம்' என்று கொண்டாவது வாசியுங்கள். என்னுடைய உடல் நலம் ஆலோசிக்கப்படுமிடத்தில் இன்னும் எத்தனைநாள் வரையில் எழுதிக்கொண்டிருப்போமென்பது அறிந்துகொள்ள முடியாமலிருக்கிறது. ''அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்'' என்கிறகணக்கிலே இதையெழுதிப் போருகிறேன்.

அடியேனுக்குத் திருத்தகப்பனார் ஏழாவது பிராயத்தின் தொடக்கத்திலேயே உபநயநம் செய்வித்தார். அக்ஷராப்யாஸ காலத்திலிருந்தே மிக்க ஊக்கத்துடன் கல்வி பயில்வித்தார். மூன்றாவது பிராயம் நிரம்பி நாலாவதுபிராயம் தொடங்கினவன்றேபிடித்து நிகழ்ச்சிகள் பெரும்பாலும் எனக்கு நினைவிருக்கின்றன. திருத்தகப்பனாருக்கு அடியேன் ஏகபுத்ரனாகையாலே ஒரு நொடிப்பொழுதும் என்னைத்தனியே விடமாட்டார். திருமலைதிருப்பதியில் உற்றாருறவினர் எமக்கு அதிகமாகையாலே அவ்விடத்திற்கு அடிக்கடி யெழுந்தருள்வர் திருத்தகப்பனார். நானும் கூடவே செல்வேன். அங்குள்ள பெரியார்களோடு பழக்கம் எனக்கு நாலாவது பிராயத்திலிருந்தே ஏற்பட்டுவிட்டது. ஜந்மாந்தர ஸுக்ருதவிசேஷந்தான் இதற்குக்காரணமென்ன வேணும். பகவத்பாகவத கடாக்ஷவிசேஷமுமாம். பதினான்கு பிராயத்திற்குப்பிறகு அடியேன் தென்னாடு வடநாடுகளில் யாத்திரை (அல்லது ஸஞ்சாரம்) செய்தது பற்றிப் பலதடவை யெழுதியிருக்கிறேன். ஆழ்வார் திருநகரி வானமாமலை திருக்குறுங்குடி வரையில் ஸஞ்சரித்தது முப்பது நாற்பது தடவைகளுக்கு மேலிருக்கும். திருவனந்தசயனம் முதலான மலைநாட்டுத்திருப்பதிகளை ஏழுபரியாயம் ஸேவித்திருக்கிறேன். ஹரித்வாரம் ஹ்ருஷீகேசம் லக்ஷ்மணஜூலா பர்யந்தமாக வடநாட்டு க்ஷேத்ரதீர்த்தங்களுக்கு இருபத்துமூன்று பரியாயமும், ஸ்ரீபதரிகாச்ரமத்திற்கு மூன்று பரியாயமும் சென்றிருக்கிறேன். அவ்வவ்விடங்களில் பரிசிதர்களான வைதிகலௌகிகப் பெரியார்கள் எண்ணிறந்தவர்கள். ஆங்காங்கு அநுபவித்த அதிசயங்களும் கணக்கிலடங்காதவை. இரண்டுமூன்று வருடங்களாகவே இரவில் ஒருநொடிப்பொழுதும் உறக்கமின்மையால் அப்போது நினைவுக்கு வருவன

http://acharya.org

எண்ணிறந்தவை. அவற்றை எழுதாதிருக்கமுடியவில்லை. அன்றியும் நாற்பது வருடங்களுக்கு மேலாக உபந்யாஸத்தின்பொருட்டு சென்னைக்குப் போக்குவரத்து ஏற்பட்டதிலிருந்து இதுவரை எத்தனை மஹான்களோடு பழக்கம் ஏற்பட்டதென்று பார்த்தால் அது ஆயிரக்கணக்கில்தான் தேறும். பலர் காலஞ்சென்றுவிட்டார்கள். பலர்வெளியூர்களுக்குச்சென்று வாழ்கின்றார்கள். பலர் அடிக்கடி காட்சி தருகின்றார்கள். சென்னைத் தொண்டமண்டலம் ஸ்கூல்ஹாலில் பகவத்கதாப்ரஸங்க ஸபையின் மூலமாக அந்வய மேற்பட்டது 1931ஆம் வருடத்தில். பிரதிவாரமும் சனி ஞாயிறு தோறும் நடந்து வந்த காலக்ஷேபங்கள் ஏறக்குறைய முப்பதாண்டளவும், பிறகு ஸந்த்காலக்ஷேபஸபாமூலமாகப் பத்தெட்டு வருடங்கள் சனி ஞாயிறுதோறும் நடந்துவந்தது. பத்துவருஷகாலமாக மார்கழித் திங்களநுபவம் மட்டுப் நிகழ்ந்துவருகின்றது. இதுபற்றின இராச்சிந்தனைகளும் அளவுகடந்தவை. "தே ஹி நோ திவஸா கதா:".

"ந ஹி கச்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யகர்மக்ருத்" என்று கீதாசார்யனருளிச் செய்தது மற்றையோரிடத்தில் எப்படியோ அறியேன்; என்னிடத்தில் அது அநுபவஸாக்ஷிகம். குர்வத்ரூபங்களான கரணங்கள் பகற்போதுகளை இனிதாகப் போக்குவிக்கின்றன. எனது ஜ்யேஷ்ட ஜாமாதா ஸ்ரீ உவே. அக்காரக்கனி ஸ்வாமியும் அவருடைய அத்விதீய திருக்குமாரன் சிரஞ்சீவி அனந்தாழ்வானும் உசாத்துணையாயிருந்து பகற்போதை இனிதுபோக்குவிக்கின்றனர். ஒவ்வோரிராப்பொழுதும் சிந்தாபரம்பரைகளிலேயே செல்லுகின்றன. சிந்தையில் வருவனவெல்லாம் எழுதிமுடியா; எழுதவேணுமென்று தோன்றுமவற்றை 1, 2, 3 ....என்று லக்கங்கொடுத்து எழுதிப்போகிறேன். ருசியுடையார் வாசித்துப் போருக. (முன்னுரை முற்றிற்று). ... ...

பதரிகாச்ரம மார்க்கம்

1. என்னுடைய சிந்தனையில் அதிகமாக நிகழ்வது ஸ்ரீபதரிகாச்ரம மார்க்க சிந்தனை. பதரிகாச்ரமத்திற்கு மூன்றுவிசையாத்திரை செய்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறேன். அக்காலத்தில் தேவப்ரயாகை, கீர்த்திநகர்வரைக்குமே பஸ்ஸர்விஸ் இருந்தது. இப்போது (பதினைந்திருபது வருடங்களுக்கு மேலாக) பத்ரிநாத் வரையில் பஸ்ஸர்விஸ் செல்லுவதாகச் சொல்லுகிறார்கள். அதுநிற்க, கீர்த்திநகர் வரையில் மோடார் பஸ் சென்றுகொண்டிருந்த காலத்திலும் நான் அதில் ஏறிப் பயணம் செய்யாமல் இருவர் வஹித்துச் செல்லும் டோலியிலேயே பயணம் செய்தேன். டோலியில் பயணமென்று பெயரேதவிர, பெரும்பாலும் நடந்தே செல்வேன். "எங்களுக்குக் கூலிகொடுத்து விட்டு ஏன் ஸாமீ நடக்கிறீர்கள்?" என்று டோலிக்காரன் அடிக்கடி சொல்லுவன். ஆனாலும் அந்தவழியின் அழகு டோலியில் உட்காரச்செய்யாது. அந்தவழியழகைப் பற்றி எத்தனைபக்கமும் எழுதலாம். மலைநாட்டில் திருவண்வண்டூர் என்பது ஒரு திருப்பதி. அவ்விடத்திற்குப் பறவைகளைத் தூதுவிடுகிறார் நம்மாழ்வார் [திருவாய்மொழி — ஆறும்பத்து முதற்பதிகத்தில்] அதில் ஏழாம்பாட்டு "ஒருவண்ணஞ் சென்றுபுக்கு எனக்கொன்றுரை ஒண்கிளியே!" என்பது. இங்கு நம்பிள்ளை யீட்டில் காணும் அர்த்தவிசேஷத்தை ஐயோ!

http://acharya.org

ஆர்க்குரைப்பேன்! இரண்டு பொருள் பணிக்கப்படுகிறதிங்கு; இரண்டாவது பொருளைக்கேண்மின். [ஒருவண்ணம் சென்றுபுக்கு] வழியானது நெஞ்சை யபஹரிக்கவல்ல போக்யதையையுடைத்து; அதில் காலதாமதமாகாமே வருந்தி ஒருபடி சென்று புக்கு—என்பதாம். இவ்வார்த்தை வெளியை நோக்கிச் சொல்லுவதானாலும், "சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி ஜ்ஞானகர்மங்களைச் சிறகென்று குருஸப்ரஹ்மசாரி புத்ரசிஷ்யஸ்தானே பேசும்" என்ற ஆசார்யஹ்ருதய ஸூக்தியின்படியும், 'தேசிகாஸ் தத்ர தூதா:' என்ற தேசிகஸூக்தியின் படியும் உத்தமாதிகாரிகளே விவக்ஷிதர்களாகையாலே அவர்களைநோக்கி ஆழ்வார் எச்சரிக்கை செய்கிறார். மலைநாடாகையாலே வழியெல்லாம் கண்ணைக் கவருமதாயிருக்கும். அவ்வழகில் கண்ணைச் செலுத்தினீர்களாகில் மேலே வழிநடந்து செல்லமுடியாது; ஒவ்வோரிடத்திலும் தங்கிவிடநேரும்; என் காரியம் கெடும். ஆகவே கண்ணைமூடிக்கொண்டு போங்கோள்! என்றாராயிற்று. [ஈட்டில் இங்கேஒரு நிதியுண்டு] தசரதசக்ரவர்த்தி துஞ்சினபிறகு பரதசத்ருக்நர்களையழைத்து வருதற்காகத் தூதுவர் யுதாஜித்தின் நகரத்திற்குச் செல்லுகிறார்கள்; அதைச் சொல்லுகிற வால்மீகிமுனிவர்—'ஸராம்ஸி ச ஸபல்லாநி நதீச் ச விமலோதகா:, நிரீக்ஷமாணாஸ் தே ஜக்மு: தூதா: கார்யவசாத் த்ருதம்' என்கிறார். இந்தச்லோகத்தை நம்பிள்ளை யெடுத்து இங்கு வியாக்கியானித்தருளுகிறார். அழகிய தடாகங்களையும் நதிகளையும் பார்த்துக்கொண்டே போனார்கள் என்று சுலோகத்திலுள்ளது. "பாராதேபோனார்களென்கை" என்று நம்பிள்ளை அர்த்தம் செய்தருளுகிறார். நிரீக்ஷமாணா: என்பதற்கு இது அர்த்தமா? பலர் என்ன நினைப்பர்களென்றால் ஈக்ஷமாணா: என்னாமல் (நிரீக்ஷமாணா:) என்றிருக்கையாலே பாராதேயென்று பொருள்பணித்தாரென்று நினைப்பர்கள்.

அதுமருள்; [நிரீக்ஷமாணா ஜக்மு:] என்பதற்குப் பார்த்துக்கொண்டே போனார்கள், என்றுதான் பொருள். பார்த்தவிடங்கு நின்றுநின்று அநுபவிக்கவேண்டியிருக்க, அநுபவியாதே போனார்களென்றுங்கருத்தை "பாராதே போனார்கள்" என்கிற ஸ்ரீஸூக்திகாட்டும்: 'ஸ்நிக்த நீலாந்தக மகாந்தநிர்ப்பரே மதுவ்ரதோ நேக்ஷ்ரகம் ஹி வீக்ஷதே' என்ற ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியில் "ந வீக்ஷதே" என்றதன் தாற்பரியத்தை இங்கு நினைப்பது.

இப்படிப்பட்ட போக்யதை உண்மையில் பதரிகாச்ரம மார்க்கத்தில்தான் காணக்கிடைக்கும். வதரியென்று ஸேவிக்கவேண்டா. ஜோஸீமட் என்கிறவிடத்திற்கு அப்பால் போகாமே வழியிலேயே திரிந்துகொண்டிருக்கலாம். முப்பத்தைந்து வருடங்களுக்கு முற்பட்ட செய்தியை இன்று எழுதுகிறேன். இப்போது எப்படியிருக்கிறதோ அறியேன். (உத்தரராமசரிதத்தில்) சம்புகவதத்திற்காக தண்டகாரணியத்திற் கெழுந்தருளின பெருமாள் சொல்லுவதாக வைத்து பவபூதி மஹாகவி பேசினது 'புரா யத்ர ஸ்ரோத: புலிநமதுநா தத்ர' என்று. நிற்க. ஒருவிநோதம் கேளீர். இடையில்கர்ணப்ரயாகமென்று ஓரிடம்; காஞ்சியிலிருந்தும் சென்னையிலிருந்தும் என்னுடைய தபால்களும் Press Proof-ளும் வருவதற்கு அவ்விடம் c/o Post Master விலாஸம் கொடுத்திருந்தேன். அவ்விடம்நான் போய்ச்சேர்ந்தஸமயம் மாலை நான்குமணி. அப்போதுதான் போஸ்டுமேஸ்டர் ஆபீஸ்கதவைப் பூட்டிக்கொண்டு இல்லம் சென்றுவிட்டார். அங்கிருந்து ஏழாவது மைலில் அவரிருப்பு. தபால்களைப்

http://acharya.org

Released by Maran's Dog ,Toronto, Canada

பெற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தினால் அவரிடம் சென்று அவருக்கு நாலைந்து ரூபாய்கொடுத்தாவது அவரை ஆபீஸுக்கு அழைத்துவந்து தபால்களைப் பெறவேணுமென்று நிச்சயித்து உடன் வந்தவர்களில் சிலரைத் துணைகொண்டு புறப்பட்டேன். ஏற்றக்குறைவில்லாமல் ஏழுமைல் தூரம் சென்றிருக்கிறேன். அது ஒரு மைலாகக் கூடத்தோன்றவில்லை. வழியின் அழகை என்னவென்று வருணிப்பது? எங்குப்பார்த்தாலும் தீர்த்தப்ரவாஹம்; சோலைகளோ சொல்லத்தரமன்று. *ஒருவண்ணம் சென்றுபுக்கு' என்று ஆழ்வாரருளிச் செய்தபடியேதான் சென்று சேர்ந்தேன். போஸ்டுமேஸ்டர் ஒருமண்மித்தையின் மீது நால்வருடன் உட்கார்ந்து சீட்டாடுகிறார். என்னைக்கண்டவுடனே நெடுநாள் பழக்கமுள்ளவர்போல ''ஆயியே ஆயியே'' என்றழைத்து, தபதுடையின்கீழே ஒட்டிவைத்துக்கொண்டிருந்த தபால் கட்டை யெடுத்துக் கொடுத்துவிட்டார் நான் கேளாமலே. நான் தான் P. B A. என்றும், தபால் பெறுவதற்கே நான் வந்தேனென்றும் அவர் எப்படியோ தெரிந்து கொண்டார். அது நிற்க. வதரிவழியில் சுற்றுப்பக்கங்களில் பலபல கிராமங்கள் இருக்கின்றனவாம். அவ்வவ்விடங்களுக்குப்போகும் ஜனங்களுக்காகவே முக்கியமாக மோடார் பஸ்கள் செல்லுகின்றனவாம். பதரீநாதன் ஸன்னிதி பூட்டியிருக்கிற மாதங்களிலுங்கூட சமௌலி, ஜோஸீமட்வரையில் ஸர்விஸ் பஸ்கள் போகின்றனவாம். அதுபற்றி நமக்கென்ன? பதரிகாச்ரமம் ஸேவிக்கப்போமவர்கள் ஸாமான்ய ஜனங்கள் எப்படியாவது போகட்டும். விலக்ஷணாதிகாரிகள் பழைய வழியில் நடந்தே சென்றால் பெறும் ஆனந்தம் வாசாமகோசரமேயாகும். இன்றுபோய்ச் சேர்ந்து நாளைமாலை திரும்பி வருவதில் என்ன சுகம்? என்ன இன்பம்?

2. மற்றொன்றுங் கேளீர்.

மற்றொரு பயணத்தில் வதரிவணங்கிவிட்டுத் திரும்புகையில் கீர்த்திநகர் வந்து சேர்ந்தோம். அங்கிருந்து தேவப்ரயாகை [கண்டமென்னுங் கடிநகர்] போக வேண்டும். காலை ஏழு மணிக்கு கீர்த்திநகர் வந்து நிற்கிறோம். மேலே போகும் வழியில் பலவிடங்களில் மண்சரிவு ஏற்பட்டு வழி அடைபட்டுக்கிடக்கிறதென்றும் நடந்து செல்லமுடியாதென்றும், வழி செவ்வைப்படுவதற்கு ஒருவாரமாகுமென்றும் சொல்லி விட்டார்கள். என் செய்வதென்று தோன்றாமல் திகைத்து நிற்கிறோம். குறுக்கே வேறுவழி யுள்ளதென்றும், அந்தவழி இரட்டிப்பான தூரமாகுமென்றும் அழகானவழிதானென்றும் அங்குள்ளார் சொன்னார்கள். அங்கு வந்து நிற்பவர்கள் மற்றும் பலபல நண்பர்கள். அவர்களெல்லாரும் அந்த வழியே செல்லப் புறப்பட்டுவிட்டார்கள். என்னுடன் கூடவந்திருப்பவர்கள் ''நாமும் போய்த்தானே யாகவேண்டும்! வேறுகதியென்ன?'' என்று சொல்லிக்கொண்டு அந்தக் குறுக்குப் பாதையில் செல்லப் புறப்பட்டுவிட்டார்கள். நானும் கையை வீசிக்கொண்டு செல்லத் தொடங்கினேன். அதைக் குறுக்குவழி யென்று சொல்லுவது மிகதவறு. நேர்வழியைக் காட்டிலும் மிக விசாலமும் ரமணீயமுமான வழி அது. ஆனந்தமாகச் செல்கிறேன். அன்று திருவாடிப்பூர மஹோத்ஸவ தொடக்கநாள். நாச்சியார் திருமொழி யநுஸந்தானம் பண்ணத் தொடங்கிவிட்டேன். *மரங்களுமிரங்கும் வகை மணிவண்ணவோவென்று கூவுமால்' என்றாற்போலே மிடற்றுவலிபுள்ளவளவும் உச்சஸ்வரத்தில் அரையர் ஸேவையடைவில் அநுஸந்திக்

Released by Maran's Dog ,Toronto, Canada
http://acharya.org

கிறேன். முன்னே சென்று கொண்டிருந்த ஏழெட்டு உத்தராதி ஸ்ரீவைஷ்ணவர்கள் நின்றிருந்து பின்தொடர்ந்துவர ஆரம்பித்தார்கள். ஆனந்தம் மேலிட்டது. வழி நடக்கிற சிரமம் சிறிதும் தெரியவில்லை. தேவப்ரயாகைக்கு நடுப்பாதி வழியில் ஒரு சட்டி; (தங்குமிடம்) என்னைச் சேர்ந்தவர்கள் 10 மணிக்கே அவ்விடம் சென்று சேர்ந்து தளிகையும் முடித்து என் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஒருமணிக்கு நான அங்குப்போய்ச் சேர்ந்தேன். அவ்விடம் நடுக்காடாக இல்லை. "பூவியல் பொழிலும் தடமுமவன் கோயிலுங்கண்டு" என்று நம்மாழ்வாரும், "மன்னுதண்பொழிலும் வாவியும் மதிளும் மாடமாளிகையும் மண்டபமும்" என்று திருமங்கையாழ்வாரும் அருளிச்செய்கிறபடியே பரமபோக்யமான ஸந்நிவேசமாயிருந்தது. மலையருவிகள் பெருகுவதும் கங்கை நீர்வெள்ளம் பாய்வதும் எந்த விடத்திலும் ஆச்சரியம்! ஆச்சரியம்!!. அங்கிருந்து தேவப்ரயாகை இன்னமும் பாதி வழியுள்ளது. பிற்பகலில் புறப்பட்டோம். அந்தவழியின் அழகும் அற்புதமே. நிலவுலகில் இப்படிப்பட்ட இடங்களும் உள்ளனவா! என்று வியந்தேன். ... ...

3. வானமாமலை சின்னகலியன் ஸ்வாமியும் விருந்தாவனமும்

ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி வானமாமலை. சின்னகலியன் ஸ்வாமி வடநாட்டு யாத்திரையில் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்திற்கு விருந்தாவனத்தில் தங்கியிருந்தாராம். நாடோறும் யமுனைநீராட எழுந்தருள்வராம். ஒருவரிருவர் கூடச்செல்வர்களாம். ஒருநாள், உடன்வந்தவரை ஓரிடத்தில் இருத்திவிட்டு வெகுதூரம் எழுந்தருளினாராம். அப்போது யமுனையில் மஹாப்ரவாஹம் செல்லுகின்றதாம். ஜீயர் ஸ்வாமி ஏதேனும் திருவுள்ளத்தில் கிலேசத்தாலே ப்ரவாஹத்தில் இறங்கி விடப் பார்க்கிறாரோவென்று அதிசங்கித்து, கூடவந்தவர் மறைந்தோடிச் சென்று பார்த்தாராம். ஸ்ரீஸ்வாமி காஷாயத்தைக் களைந்துவைத்திட்டு (கௌபீனத்தோடே) யமுனையாற்றங்கரை மணலில் முள்ளுங்கல்லும் பாராதே நெடுந்தூரம் புரண்டு கொண்டிருந்தாராம். கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில் "ஹா! ஜந்ம தாஸு ஸிகதாஸு மயா நலப்தம் ராஸே த்வயா விரஹிதா: கில கோபகந்யா:, யாஸ் தாவகீந பதபங்க்தி ஜுஷோ ஜுஷந்த நிக்ஷிப்ய தத்ர நிஜமங்கம் அநங்கதப்தம்" என்றருளிச்செய்தார். ராஸக்ரீடையன்று பேரின்பவெள்ளம் பெருகிச்செல்ல, வறட்கேடுபோல வெள்ளக்கேடுமாகா தென்றெண்ணிய கண்ணபிரான் மறைந்தனனாக, தத்விச்லேஷத்தைப் பொறுக்கமாட்டாத கோபிகள் அவன்திருவடிச் சுவடுபட்ட யமுனையாற்று மணல்களிலே விழுந்து புரண்டார்களென்றது இதில். ஜீயர்ஸ்வாமிக்குஇந்த பாவநாப்ரகர்ஷம் முற்றிஅங்ஙனே ஆசரித்தபடியென்று பலரும் வியந்து பேசக்கேட்டேன்.

4. நாஸிக் பஞ்சவடியில் ஓர் அதிசயம்

ஸ்ரீமத் ஜகத்குரு காதி ஸ்வாமி எழுந்தருளியிருந்தகாலத்தில் நாராயணதாஸ் என்கிற ஒருமார்வாடி பக்தன் சிப்பாயாக இருந்துவந்தான். அவனை அடியேன் நேரில் அறிவேன். அவன் பத்தெட்டு வருஷங்கள் காஞ்சியில் இருந்தான். அவன் அந்நாஹாரத்தைவிட்டு வேப்பிலையையே உணவாகக் கொள்ளத்தொடங்கினான்.

http://acharya.org

நாராயணயோகி யென்று திடீரென்று ப்ரஸித்திபெற்றுவிட்டான். சிப்பாய்வேலையை விட்டு விலகி வடதேசத்திற்குப் போனான். நாஸிக் பஞ்சவடிக்குச்சென்று சேர்ந்தான். அங்கு ஓரிடத்தில் குடில் கட்டிக்கொண்டு வாழ்ந்துவந்தான். யோகிராஜ் என்று அந்த ப்ராந்தங்களில் ப்ரபல ப்ரஸித்தி ஏற்பட்டுவிட்டது. பேசுவதைவிட்டு மௌனச்சாமியாய்விட்டான். எதையும் எழுதிக்காட்டுவதேயொழிய வாயால் சொல்லுவதில்லை. பெரியபெரிய ஸேட்டுக்கள்வந்து ஆச்ரயிக்கத் தொடங்கினார்கள். ஒருமாதத்தில் மஹாதனிகனாய்விட்டான். அங்கேயே ஸமீபத்தில் மிகப் பெரிய மாடமாளிகை நிர்மாணம் செய்வித்தான். ஸர்க்கார்வந்து ''லைஸன்ஸ் பெறுமல் எப்படி இந்த பில்டிங் கட்டுவித்தாய்?'' என்று கேள்வி கேட்டார்கள். நாளைக்கு பதில் சொல்லுகிறேன் என்று சொல்லி யனுப்பிவிட்டு அன்றிரவே பல வேலைக்காரர்களை வைத்து பில்டிங்கை ஜாடாக இடிக்கச் செய்துவிட்டான். (இது 1940 ஆம் வருஷத்துச் செய்தி.) அந்த ஸமயம் நான் நாஸிக் பஞ்சவடிக்குச் சென்றிருக்கிறேன். அப்போது என்னோடுகூட வந்தவர்களில் சென்னையில் எனக்குப் பிரபல ஆப்தராயிருந்த ஸ்ரீ உ. வே. மங்கலம் ராமாநுஜாசாரியர் ஒருவர். ஓரிரவில் இடிக்கப்பட்ட பில்டிங்கை நாங்கள் முதல்நாள் பார்த்திருக்கிறோம். மறுநாள் காலை, முழுதும் இடிக்கப்பட்டுத் தரைமட்டமா யிருப்பதையும் பார்த்தோம். அதைப் பூராவும் இடிப்பதற்குக் குறைந்தபக்ஷம் ஒரு மாதகாலமாவது வேண்டியிருக்கும். இருபது நாட்களாவது இல்லாமல் இடிக்கவே முடியாது. இடித்த மறுநாள் காலையில் அங்குக் கூடின கூட்டம் ஒருமைல் தூரத்திற்கிருந்தது அப்போது யாவரும் சொன்னதாவது—இது வேலைக்காரர்களால் இடிக்கப்பட்டதன்று, இவனுடைய யோகபலத்தினாலேயே இடிக்கப்பட்டது என்று அப்போது நாங்கள் அவ்விடத்தில் ஒருவாரம் தங்கியிருந்தோம். யோகிராஜ் மறுபடியும் தத்திநாகத் தகடுகளால் அமைதத குடீரத்தில் வஸித்துவந்தான்.

அவனை ஸேவிக்கவருகிற ஸேட்டுக்களின் கூட்டம் வாசாமகோசரம் மோடார் கார்கள் வந்து குழுமுகின்றன. பாம்பே, கல்கத்தா முதலிய பலநகரங்களிலிருந்தும், கவர்னர்போல்வாரும் வந்துகொண்டிருக்கிறார்கள். காலை 6 மணிமுதல் மாலை 4 மணிவரையில் பெருந்திரள், பிறகு ஏகாந்தமாயிருக்கும். மாலை 5 மணிக்கு மேல் ஒருநாள் அவனைக் காணச் சென்றேன். அவன் காதி ஸ்வாமி ஸன்னிதியில் பத்தெட்டு வருஷம் சிப்பாயாக இருந்தகாலத்தில் நித்தியம் பரிசிதனாகையால் ஏகாந்தமாகப் பேசுவோமென்று போனேன். அவன் மௌனத்தை விடாமல் எழுத்து மூலமாகவே பதிலளித்து வந்தான். ''உனக்கு இவ்வளவு ப்ரபாவம் எப்படி வந்தது?'' என்று கேட்டதற்கு 'ஸ்ரீகாதிஸ்வாமியின் திருவடி ப்ரபாவந்தான்' என்று எழுதிக்காட்டினான். மேலும் நடந்த அதிசயச் செய்திகள் அபரிமிதம். நிறுத்திக்கொண்டேன

5. "சகார சக்ரேசநுதிம்"

ஸுதர்சநசதகம் என்கிற ஸ்தோத்ரம் ஸுப்ரஸித்தமானது, கூரத்தாழ்வான் திருவடியான கூரநாராயண ஜீயர் பணித்தது. மிகவும் வரப்ரஸாதியானது. ஸ்ரீரங்கத்தில் திருவரங்கம் பெருமாளரையருடைய ஒரு நோய் தீருவதற்காகப் பணித்தது. இதற்குத் தனியன் "ரங்கேச விஜ்ஞப்தி கராமயஸ்ய சகார சக்ரேசநுதிம் நிவ்ருத்தயே" இத்யாதி. இதில் [சக்ரேசநுதிம்—சகார] எனபதற்கு சக்கரத்

http://acharya.org

தாழ்வான் விஷயமான ஸ்தோத்ரத்தை இயற்றினர் என்று பொருள். இதுநிற்க. ஸ்ரீ ஜகத்குரு காதி ஸ்வாமி தமது திருமாளிகையில் ஒரு வைதிகரை ஸுதர்சந சதக பாராயணம் தினப்படியாகச் செய்துவர நியமித்தருளி நடந்துவருகிறது. அந்த பாராயண ஸ்வாமி ஒருநாள் காதி ஸ்வாமியிடம் வந்து "ரகார என்றாலும். சக்ரே என்றாலும் அர்த்தம் ஒன்றுதானே. இந்த புநருக்திக்கு என்ன தாத்பர்யம்?" என்று கேட்கிறார். அடியேனும் உடனிருக்கிறேன். ஸ்ரீ ஸ்வாமியோ சிரிக்கிறார்; இது ஜிஜ்ஞாஸயா கேட்கிறாரா? தமாஷாகக் கேட்கிறாரா? என்பது புரியவில்லையே யென்கிறார் ஸ்வாமி. அடியேன் விஜ்ஞாபித்தேன்—ரகார என்பது பரஸ்மைபதி, சக்ரே என்பது ஆத்மநேபதி. பரார்த்தமாகவும் ஆத்மார்த்தமாகவும் இந்த ஸ்தோத்ரத்தை ஸாதித்தாரென்றபடி—என்றேன். த்ருப்தோஸ்மியென்று சென்றார் கேட்டவர்.

உபந்யாஸகர்கள் இருவரின் ஸம்பாஷணை

(ரங்காசார்யரும் ராகவாசார்யரும்)

(ரங்காசாரியர்.) ஸ்வாமிந்! ராகவாசாரியரே! தேவரீர் காஞ்சீபுரத்திலிருந்து வெளிவரும் ஸ்ரீராமாநுஜன் பத்ரிகையைக் கடாக்ஷிப்பதுண்டோ?

(ராகவாசாரியர்)— ஆரம்பத்திலிருந்தே அப்பத்திரிகைக்கு நான் சந்தாதாரன். இருபத்தேழுவருஷமாக நான் அதை வாசித்துவருகிறேன். 324 ஸஞ்சிகைகள் இதுவரையில் வெளிவந்திருக்கின்றன. அவை யெல்லாவற்றையும் வாசித்திருப்பது மல்லாமல் சேமித்தும்வைத்திருக்கிறேன். பல ஸம்புடங்களாக பயிண்டுசெய்தும் வைத்திருக்கிறேன். அடிக்கடி பலர் என்னிடமிருந்து வாங்கிக் கொண்டுபோய் வாசித்தும் தருகிறார்கள். அதைப்பற்றி என்ன?

(ரங்கா) ஒன்றுமில்லை; அதில், உபந்யாஸக ஸௌபாக்யமென்றும் உபந்யாஸகர்களுக்கு உபஹாரங்களென்றும் தலைப்பிட்ட கட்டுரைகள் வெளிவருகின்றனவே, அதைப் பற்றிச் சிறிது பேசுகின்றேன். இக்காலத்தில் ஆங்காங்கு உபந்யாஸங்கள் செய்யும் பண்டிதர்கள் இந்தக்கட்டுரைகளைக் கொண்டுதான் உபந்யாஸங்கள் செய்கிறார்களோ? அந்த உபந்யாஸக ஸௌபாக்யாதிகளில் அண்ணங்கராசாரியர் வெளியிடும் அர்த்த விசேஷங்கள் பூர்வாசார்யர்களருளிச்செய்த க்ரந்தங்களிலுள்ளவையேயன்றி அவர் ஸொந்தமாகக் கற்பித்து எழுதுபவையல்லவே. பூர்வாசார்ய க்ரந்தங்களிலுள்ள அர்த்த விசேஷங்களை யாவரும் எடுத்து கோஷ்டிகளில் உபந்யஸிக்கலாம்; அப்படி உபந்யஸித்தும் வருகிறார்கள். அதெல்லாம் அண்ணங்கராசார்யருடைய உபந்யாஸக ஸௌபாக்யாதிகளிலிருந்து கொள்ளைகொண்டு உபந்யஸிக்குமவையா? அப்படி உலகம் நினைத்துவிடும்படியாகவன்றோ ஸ்ரீ ராமாநுஜன் செய்கிறது?

(ராகவா) திவ்யப்ரபந்த மஹாநிதி ரெ. 231ல் அவரே ப்ரஸ்தாவம் செய்திருக்கிறார். (என்னவென்றால்;) ப்ரௌடர்களான உபந்யாஸகர்களை நோக்கி இவைஎழுதுவதல்ல; நூதனமாக உபந்யாஸஞ்செய்ய விரும்புமவர்களின் அபேக்ஷையைப் பூர்த்திசெய்வதற்காகவே இப்படிப் தலைப்பிட்டு எழுதுகிறேன்—என்று உலகமறிய எழுதியிருக்கிறார். மேலும், ப்ரௌடர்களுங்கூட ப்ராமாணிகர்களாயிருப்பவர்கள் தங்கள் உபந்யாஸங்களில் "அண்ணங்கராசாரியருடைய நூல்களிலுள்ள விஷயமென்றும், ஸ்ரீராமாநுஜனில் கண்ட விஷயமென்றும்பலருமறியச் சொல்லிவருகிறார்கள். மணவாளமாமுனிகளொருவரே 'பிறர்மினுக்கம் பொறாமையிலாப் பெரு

http://acharya.org

மையும் பெற்றேமே* என்று அருளிச்செய்தார். இக்காலத்திலும் பொருமையற்ற வித்வான்கள் இல்லாமற்போகவில்லை. அண்ணங்கராசாரியர் உபந்யாஸக ஸௌபாக்யமென்று மகுடமிட்டு எழுதுவதுஇருக்கட்டும்; திவ்யப்ரபந்த திவ்யார்த்ததீபிகை நாலாயிரத்திற்கும் வெளிவந்து உலகமெல்லாம் பரவியிருக்கின்றது. ஒருபதிப்பன்று, பலபதிப்புகளேறியிருக்கின்றன. அதுதவிர, முகுந்தமாலை ஆரப்பித்து நக்ஷத்ரமாலைவரையில் பெரியஸ்தோத்ரங்கள் சிறியஸ்தோத்ரங்கள் என்கிறவாசியில்லாமல் ஸகலஸ்தோத்ரங்களுக்கும் விரிவானவுரைகள் வெளியிட்டிருக்கிறார். தேசிகஸ்தோத்ரங்களுக்கும் பலவற்றுக்கு வியாக்கியானங்கள் வெளியிட்டிருக்கிறார். முமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீவசநபூஷணம், ஆசார்யஹ்ருதயம் முதலான ரஹஸ்யங்களுக்கும் தெளிவுரைகள் பன்முறையும் வெளியிட்டிருக்கிறார். இவையெல்லாம் தமிழில்மட்டுமல்ல, ஸம்ஸ்க்ருதம்,ஹிந்தி,தெலுங்கு பாஷைகளிலும் அவராலேயே வெளியிடப்பட்டிருக்கின்றன. இவை நாற்றிசையும் எண்டிசையும் பரவியுள்ளன. உபந்யாஸகர்களிருக்கட்டும்; ஜ்ஞாதாக்களாயும் ஜிஜ்ஞாஸுக்களாயுமுள்ளவர்கள் அவற்றையெல்லாம் உபயோகங்கொள்ளாமலா இருக்கிறார்கள்?

(ரங்கா) நீர் சொல்லுவது வாஸ்தவம்; கத்யத்ரயம், பஞ்சஸ்தவம், ஸ்ரீரங்கராஜஸ்தவம், ஸ்ரீ குணரத்னகோசம், ஸுதர்சநசதகம்......இவை எவ்வளவு கடினமான க்ரந்தங்கள்! இவற்றுக்கெல்லாம் அண்ணங்கராசாரியர் எளிய தெளிய உரைகளை யெழுதி வெளியிட்டிருப்பது உலகுக்கு எவ்வளவோ உபகாரந்தான். இல்லையென்று யார் சொன்னார்? உபந்யாஸக ஸௌபாக்யமென்றும், உபந்யாஸகர்களுக்கு உபஹாரங்களென்றும் மகுடமிடாமல் மற்றும் நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் கட்டுரைகள் எழுதுகிற முறைபிலேயே எழுதலாமே யென்று சிலர் பேசிக்கொண்டதை அநுவாதம் செய்தேனத்தனை.

(ராகவா) விவேகிகளாய் அநஸூயுக்களாயுள்ளவர்கள் அப்படி ஒருகாலும் சொல்லார்கள். உண்மையில் ஸ்ரீராமாநுஜனில் வெளிவரும் ஒவ்வொரு விஷயமும் உபந்யாஸகர்களுக்கு உபஹாரங்களே யாதலால் சில விஷயங்களுக்கு பட்டும் அப்படி மகுடமிடவேண்டியதில்லைதான். இட்டதனால் ஒரு பாதகமுமில்லை. ஒருவர் புதிதாக வொரு தோட்டம் சமைத்து அதில் ஒரு பெரிய தடாகமும் அமைக்கிறார். அதைப் பலர் உபஜீவிக்கிறார்களென்றால் இதில் என்னபேச்சிருக்கிறது? ஏற்கனவே தடாகங்களும் ஏரிகளுமிருக்க இந்தப் புதுநிர்மாணம் ஏதுக்கு? என்று க்ஷேபிப்பாருளரோ? ஒருவர் சிலர்க்குப் பலரறிய வஸ்த்ரதானம் செய்கிறார், சால்வையும் துப்பட்டாவும் அளிக்கிறார். அவற்றைப் பெற்றவர்கள் கம்பீரமாக அணிந்து கொண்டு உலாவவில்லையா? (ஸம்பாஷணை முற்றிற்று.)

திருமலை திருப்பதியில் ஜீயர்ஸ்வாமிகளின் பட்டாபிஷேகம்

இருபது வருஷகாலமாகப் பெரியஜீயர் ஸ்வாமியின் ஆஸ்தானத்தை அலங்கரித்திருந்த மஹாஸ்வாமியின் ஸ்தானத்திலே, ஏற்கனவே சின்னஜீயராக எழுந்தருளியிருந்த ஸ்வாமி அபிஷிக்தராயினர். சின்னஜீயர்ஸ்தானத்தில் உ. வே. ஸ்ரீவில்லிபுத்தூர் ராமையங்கார் ஸ்வாமி அபிஷிக்தரானார் (நிகழும் ஜூலைமாதம் முதல் வாரத்தில்.) ஜீயர்ஸ்வாமிகளிருவரும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க!

http://acharya.org

கண்டது நல்லதோர் ஆண்டுவிழா

ஆஸ்திகராய், பகவத்விஷயத்தில் ருசிவிச்வாஸங்களையுடையராய்த் திகழும் பெரியார்கள் இக்காலத்தில் நம் ஸம்ப்ரதாயத்தின் மேன்மைக்காகப் பல்வழிகளிலும் சிந்தித்துச் செயல்பட்டுவருகின்றனர். இளஞ்சிறுவர்கட்கு நமது ஸநாதந தர்மத்தில் சிரத்தை ஏற்படுத்துவது இன்றியமையாததென்பதுகருதி ஆங்காங்கு (வைதிக) பாடசாலைகளை ஏற்படுத்தி நடத்திவருகின்ற ஸ்ரீமான் உ. வே. A. K. சடகோபாசாரியர் ஸ்வாமியின் அருந்தொண்டு பாராட்டுக்குரியது. Divine Science Trust என்ற நிதியை ஏற்படுத்தி (26 K. K. Road. Ambuttur-Madras-53) இதன் சார்பில் ஸ்ரீரங்கம், ஆழ்வார்திருநகரி, பெருமாள்கோயில், மயிலை, திருவல்லிக்கேணி, அம்பத்தூர், திருநாராயணபுரம் முதலிய பலவிடங்களில் மாணவ மாணவிகளுக்கு திவ்யப்ரபந்தம், ஸ்தோத்ரபாடம் முதலியன கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளார் இந்த ஸ்வாமி. இப்பாடசாலைகளுள் (சென்னை) அம்பத்தூரில் நடைபெற்றுவரும் பாடசாலையினால் ஏறக்குறைய 200 பாலர்கள் பயன்பெறுகின்றனர்.

பக்தி ச்ரத்தை மிக்க இச் சிறுவர்களின் ஆர்வத்தையும் உத்ஸாஹ முன்னிட்டு இப் பாடசாலையின் (ஐந்தாவது) ஆண்டுவிழா 2?—6—7 கிழமை மாலை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நமது பத்ராநிட தமது திருமேனிபாங்கின்மையையும் பொருட்படுத்தாது இந்நிகழ்ச்சிச் செழு. சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது. அன்று மாலை 6 மணிக்கு மாணாக்கர்கள் லாண்டு ஸ்ரீ தேவராஜாஷ்டகம் முதலியவற்றை அநுஸந்தித்தார்கள். நிகழ் பொருட்டு அம்பத்தூரிலிருந்தும் பிறவிடங்களிலிருந்தும் அன்பர்கள் பெருந் ளாகக் கூடியிருந்தனர். அதன் பின் வைதிக வித்யா ஸ்தாபநத்தின் (Divine Science Trust) ஸ்தாபகரான ஸ்ரீமான் A. K. சடகோபாசாரியர் வரவேற்புரை நிகழ்த்தினார். ஸ்ரீஸ்வாமியின் விசேஷாநுக்ரஹத்தைப்பற்றி மனமுருகிப் பேசினர். [இவ்வாறு யாவரும் உளங்குளிர நிற்கையில் நிலம் கொதித்திருப்பது தகுதியன்று என்று திருவுளங்கொண்ட எம்பெருமான் இடையில் ஆழிமழைக்கண்ணனை வாழ அங்குப்பெய்திடத் திருவாணையிட்டனன்] பின்பு ஸ்ரீஸ்வாமி அம்மாணாக்கர்க்கு உபதேசரூபமாகவும் மங்களாசாஸன ரூபமாகவும் சில அமுத மென்மொழிகளை யருளிச் செய்தார். பரீக்ஷைகளில் விசேஷமாகத் தேறின சில மாணவர்கட்குப் பரிசுகளையும் வழங்கினர். தொடர்ந்து ஸ்ரீமான் உ. வே தி. அ. அக்காரக்கனி ஸம்பத்குமாராசார்ய ஸ்வாமியின் உபந்யாஸம் அச் சிறுவர் உளங்கொளத் தக்க வகையில் அமைந்தது. அதைத்தொடர்ந்து "மதுரபாஷிணி" என்று ஸ்ரீஸ்வாமியிடமிருந்து விருதுபெற்ற ஸ்ரீமதி கல்யாணீ பத்மநாபன் அவர்கள் "க்ருஷ்ணன் தூது" என்பது பற்றி பக்திரஸபரிதமான ஸங்கீத உபந்யாஸம் நிகழ்த்தினார்கள்.

இப்பாடசாலையின் ஆசிரியரான ஸ்ரீமான் K. B. தேவராஜன் B. SC. யும் அடியேனும் ஸ்ரீஸ்வாமி நியமனத்தால் சில வார்த்தைகள் விண்ணப்பித்து ஸத்தை பெற்றோம். கலியிருளே மிடைதரு மிக்காலத்தில் "இந்தளத்தில் தாமரை பூத்தாற் போன்று" அமைந்த இவ்வகைப் பாடசாலைகள் பொலிக பொலிக என்று மங்களாசாஸனம் செய்யும் ஸ்ரீவைஷ்ணவ ஸமுதாயம்.

தி. அ. அனந்தாழ்வான்:

http://acharya.org